விலை ரூபா: 8.00
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 20 வெள்ளிக்கிழமை (05.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 229

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தர தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# இராணுவச் சிப்பாய் சூட்டதில் சிகையலங்கரிப்பாளர் பலி

## பொதுமக்கள் திரண்டு வீதிமறியல்; பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு; இணுவிலில் நேற்றுப் பயங்கரம்



(இணுவில் செய்தியாளர்)

**இணுவில் கோயில் வாசல் சந்தியில் நேற்றுப் பிற்பகல் இராணுவச் சிப்பாய் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிகையலங்கரிப்பு நிலைய ஊழியர் ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். இதனையடுத்து அங்கு வீதியில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டது.**

**இதனையடுத்து நேற்று இரவுவரை அங்கு பெருமளவான இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் மக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;**

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில், இணுவில் கோயில் வாசல் சந்தியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு உயர் அதிகாரி ஒருவர் நான்கு இராணுவச் சிப்பாய்களுடன் வந்துள்ளார்.

அங்கு அவ் உயர் அதிகாரி சிகையலங்கரிப்பில் ஈடுபட்டிருந்த சமயம் அந்நிலையத்திற்கு வெளியே ஏனைய இராணுவச் சிப்பாய்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

காவலில் நின்ற சிப்பாய் ஒருவர் திடீரென தனது துப்பாக்கியை எடுத்து சுட்டுள்ளார். இதன்போது அந்நிலையத்தில் பணியில் ஈடுபட்டிருந்த கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ஜெயசீலன் சாந்தரூபன் (வயது 23) என்பவரும், அதே இடத்தைச் சேர்ந்த லோகதாஸ் (வயது29) என்பவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். அங்கு சாந்தரூபன் மரணமானார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் நாளைவரை ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்தியத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் நேற்றிரவு 8.30 மணி தொடக்கம் நாளை அதிகாலை 5 மணிவரை அமுலில் இருக்கும் என இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். பொலிஸ் அத்தியட்சகர் கடத்தப்பட்டுக் கொலை



சாள்ஸ் விஜேவர்த்தன

(இணுவில்)

**இணுவிலில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினை விசாரிக்கவென சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன (வயது 55) கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.**

இணுவில் சந்தியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் இணுவிலுக்கும், சுதுமலைக்கும் இடையே உள்ள பாலாவோடை என்ற இடத்திலிருந்து அவரது சடலம் நேற்றுமாலை மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சீருடையுடன் கடத்தப்பட்ட அவர், சாறம் - சேட்டு அணிந்து நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது சடலத்தில் அடிகாயங்களும், வெட்டுக் காயங்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் அத்தியட்சகரின் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி (12 ஆம் பக்கம் பார்க்க)



EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

# மன்னிப்புக் கோர மாட்டேன்

## -மேர்வின் சில்வா

(கொழும்பு)

கடந்த வாரம் கொழும்பு நீதி மன்றத்திற்கு முன்னால் வைத்து தான் தெரிவித்த கருத்துக்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாக கூறியிருக்கும் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா, எனினும் அதற்காக தான் மன்னிப்பு கோரப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

தன்மீதும் தன் மகன்மீதும் மேற்கொள்ளப்படும் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமை தனது அமைச்சில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவழியினரை அவமதிக்கும் நோக்குடன் எதனையும் கூறவில்லை என்றும் எனினும் தனது கருத்துக்கள் எவரையும் புண்படுத்தியிருந்தால் அதற்காக அவர்களுக்கு தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதியமைச்சர் கூறினார். ஆனால் அதற்கென மன்னிப்பு கேட்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கும் தனது வருத்தத்தைத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளதாக கூறிய பிரதியமைச்சர் இந்திய மக்களை மதிப்பதாகவும் பெரும்பாலான சிங்களவர்கள் ஆரிய வழிவந்தவர்கள் என்றும் தனது முற்பிறப்பில் தான் இந்தியாவில் பிறந்தவர் என சோதிடர்கள் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிலர் தனக்கெதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாகவும் ஊடகங்களினூடாக சேறுபூச முயல்வதாகவும் தெரிவித்த மேர்வின் சில்வா இந்த நடவடிக்கைகளால் தன்னை அசைக்க முடியாதென்றும் குறிப்பிட்டார்.

புதிய சொகுசு கார் கொள்வனவு குறித்து கேட்கப்பட்டதற்கு தனது தந்தை ஒரு வர்த்தகர் என்றும் அதனால் தன்னால் அவ்வாறான வாகனங்களை வாங்கவும் உல்லாச ஹோட்டல்களில் உணவருந்தவும் முடியுமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒரு புதிய பிரதியமைச்சர் பொறுப்பேற்கும் போது அவருக்கென புதிய காரொன்றை வழங்குவது அரசாங்கத்தின் கடமை என்றும் கூறிய அவர். வெஸ்ஸந்தர மன்னரைப்போல எவருக்கும் எப்போதும் உதவவே விரும்புவதாகவும் தன்னால் துட்டகைமுனு மன்னனைப் போல வரவும் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# விளையாட்டு விழா

வடக்கு-கிழக்கு முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலையத்தின் பருத்தித்துறை பிரதேச அல்வாய் கொத்தணிக் குடும்பத்தின் முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொத்தணிக் குடும்ப முன்பள்ளித்தலைவர் ஜெ.அகிலன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-52)

# ஆலயமும் அறங்காவலரும்

## வெள்ளிநற்சிந்தனை

மனித அறிவானது பல படிகளாய் உள்ளது. ஒருவருக்கு விளங்கும் உண்மை மற்றவருக்கு விளங்குவதில்லை. ஒருவர் மூளைக்கு புலப்படும் அறிவு மற்றொருவருக்குப் புலப்படுவதில்லை.



அம்மாதிரியே மனிதருடைய ஒழுக்கத்திலும் மேடு பள்ளங்கள் காணப்படுகின்றன எவ்வளவு முயன்றாலும் ஒழுக்கக்கேடுகளை நிமிர்த்த ஒண்ணாத மனிதரும் இருக்கின்றனர். தீமையே அறியாத மேல் மக்களும் அபூர்வமாக இருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் ஆன்மீக வளர்ச்சியின் ஏற்றத்தாழ்வே ஆகும்.

ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறுவதற்கான, லயப்படுவதற்கான இடமே ஆலயம் ஆகும். ஆனால் இன்றைய காலத்தில் ஆலயங்கள் ஆன்மாக்களை நல்வழிப் படுத்துவதற்கு மாறான இடங்களாக இருப்பது வருத்தததுடன் கவனிக்கப்படவேண்டியதாய் உள்ளது.

லௌகீக வாழ்க்கையை விரும்பி ஆலய வழிபாட்டிற்குச் செல்ப்வர்கள் உண்மைச் சமய நெறிக்கு இன்னல் விளைவிக்கும் விதத்திலே தம் வழிபாடுகளை நடாத்த நினைத்தல் கூடாது அதேபோன்று ஆலயவிழாக்கள் சமயக் கிரியைகளை நடாத்துபவர்களும், நடாத்த உதவி புரிபவர்களும் பிறர் மனம் புண் பட நடாத்தலும் நடாத்துவித்தலும் கூடாது.

ஆலயங்கள் ஆன்மீகப் பண்பின் நல் வளர்ச்சிக்காகவே பரிபாலிக்கப்படவேண்டும் அப்படிப் பரிபாலிப்பதன் மூலமே அறப்பணி நிலைக்கவும், மக்கள் நற்பண்புடையவராய் வாழவும் வாய்ப்புண்டாகும் எனலாம். பண்டைக் காலம் முதல் ஆலயமும் அதன் சூழலுமே அறப்பணிகளைச் செய்தும், வளர்த்தும் வந்ததை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. அதனால்தான் ஆலயத்தை வழிநடத்துவோர் **அறங்காவலர்கள்** என மக்களாற் பெருமையுடன் மதிக்கப்பட்டனர்.

இன்றைய ஆலயங்களிலோ ஆலயமனேச்சர், ஆலய நிர்வாகி, ஆலய தர்மகர்த்தா எனவும் ஆலயபரிபாலனத்தார் எனவும், ஒருசிலர் சேர்ந்தும், தனித்தும் ஆலயங்களின் முகப்பில், தெய்வத்திலும் தாமே பெரியவர்கள் என ஆலயச் சொத்துக்களைச் சிறிதும் கூச்சமோ வெட்கமோ இல்லாது தீண்டுபவர்களாகவும், அபகரிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனாற் கோவிற் குருமாருக்கும் தவறான மனத்தூண்டல்களுக்கு வழிவகுத்து அவர்களின் இறைபணிகட்கும் இடையூறுகளையும், இன்னல்களையும் ஏற்படுத்துகின்றார்கள். இந்தப் போக்கு இன்றைய ஆலயங்கள் பலவற்றிலும் காணக்கூடியதாக உள்ளது. ஆலயங்களைக் கொண்டு நடத்துபவர்கள் நல்ல அறங்காவலர்களாகவும், ஆலயக் குருமார் அந்த அறங்காவலர்களுடன் இணைந்து ஆலய வழிபாட்டுடன் அறப்பணிகளை ஆலயச்சூழலில் வழிப்படுத்துபவர்களாகவும் இருப்பாராயின் எமது சைவசமய நெறியும், அவ்வழிப்பட்ட மக்களும் வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகையால் உயர்வுறுவார் அன்றோ.

எமது ஆலயங்கள், வழிபாடுகள், கிரியைகள் இவற்றால் ஏற்படக்கூடிய நல்வினை, தீவினைப் பயன்களை எல்லாம் ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் வேதங்கள் யாவும் மிக மிக அற்புதமாக யாவரும் விளங்கும் வண்ணம் எடுத்துக்கூறியுள்ளன. இவற்றைக் கற்றறிந்தோர், தெரிந்தோர், ஆலயங்களையும் அறப் பணிகளையும் செவ்வனே நடாத்தவும், நடாத்துவிக்கவும் முன் வரவேண்டும்.

ஆலயம் என்பது இறைவழிபாட்டிற்கு எல்லோர்க்கும் உரியது அதனை ஒரு சில தனி நபர்களோ, அல்லது அமைப்பினரோ தம் ஆணைக்கு உட்படுத்தி நான் எனது என அகங்காரத்துடன் வழிபடுமிடங்களில் அதிகாரம் காட்டமுற்படுவதால் அவர்கள் தம் சந்ததியினருக்கே பழிதொடரக் காரணமாகி விடுகின்றார்கள். தவறான ஆலயச் செயற்பாடுகளால் ஆலயக் குருமார், தொண்டர்கள், வழிபடுவோர், பொது மக்கள் எல்லோருமே வழிதவற நேரிடுகின்றது. எனவே எல்லோரது நன்நெறி வாழ்வையும் மன திற்கொண்டு ஆலயங்கள் புனிதமாக இயங்குமாயின் அதனால் நாடே நல்வளம் காணும் என்பதில் ஐயமில்லை.

எனவே ஆலய அறங்காவலர்களும் ஆலயக் குருமாரும் இணைந்து சைவத்தை மேன்மைப்படுத்தி உலகுய்யச் செய்ய நற்பணிபுரிய வேண்டும்.

**அந்தணர் என்போர் அறவோர்**
**மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுகலான்**
(-திருக்குறள்)-

"ஆலயங்களையும் கோபுரங்களையும் உயர உயர அமைப்பதை விட அன்பும், அறப்பணியும் உயர்வதற்குப் பணிசெய்தால் அதுவே எல்லோர்க்கும் மேன்மை தரும்"

**நீர்வை மணி**

# இராசி பலன்

**05.08.2005**
**(ஆடி 20, வெள்ளிக்கிழமை)**
**அமாவாசை முற்பகல் 9.11வரை**
**ஆயிலியம் முழுவதும்**
**இராகுகாலம் 10.34 - 12.04 மணிவரை**
**சுபநேரம் 6.04 -7.34 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், ஆரோக்கியக் குறைவு. |
| இடபம் | நற்கீர்த்தி, போசன நன்மை, தெய்வ தரிசனம், குடும்பசுகம். |
| மிதுனம் | மனோ சங்கடம், காரியதாமதம், அதிக செலவு, போசனசுகக் குறைவு. |
| கடகம் | வெகுமானம், மாதர்நட்பு, முயற்சி கைகூடும், தெய்வசிந்தை. |
| சிங்கம் | சோம்பல் நிலை, சுபசெலவு, காரிய அலைச்சல், போசன சுகம். |
| கன்னி | தனதானிய சேர்க்கை, சயனசுகம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வதரிசனம். |
| துலாம் | பிரபுத்தனம், நன்கொடை, மன மகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, குடும்பக்கவலை, சரீரப்பிரயாசை, காரிய தாமதம். |
| தனுசு | பொருள் விரயம், முழங்கால்வலி, மனக்கவலை, முயற்சி தாமதம். |
| மகரம் | தெய்வதரிசனம், மனோதைரியம், பெருமையடைதல், காரிய அனுகூலம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, போசனசுகம், ஜனவசியம். |
| மீனம் | அஜீரணரோகம், காரிய இடையூறு, பண விரயம், பிரயாண பயம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# இலவச வைத்திய சேவை

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதி மக்களுக்கான இலவச வைத்தியசேவையை வடமராட்சி லயன்ஸ்கழகம் நடாத்தியது.

இவ் இலவச மருந்துச்சேவையில் 315 நோயாளர்கள் நன்மை அடைந்துள்ளனர். வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமார் தலைமயில் தென்னிந்திய திருச்சபை (குடத்தனையில்) மண்டபத்தில் இச்சேவை நடைபெற்றது.

இவ் இலவச வைத்தியசேவையில் 180 பேருக்கு கண் பரிசோதனை நடாத்தப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. அத்துடன், மருத்துவ சிகிச்சையில் 70பேரும், பற்சிகிச்சையில் 65 பேரும் பயன் பெற்றுள்ளனர்.

பொது மருத்துவசேவையை பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளையும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும் பல்வைத்திய சிகிச்சையை டாக்டர் வி.ஜெயராசாவும் மேற்கொண்டனர். (ற-35)

# வீடுகள் நிர்மாணம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 35குடும்பங்களுக்கு இலங்கை மெதடிஸ்ததிருச்சபை டயகோனி நிறுவனத்தின் அனுசரணையுடன் வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

இவ்வீடுகள் பொலிகண்டி மேற்கு ஊறணி குடியேற்றத்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவ்வீடுகளுக்கான அடிக்கல்லை டயகோணி நிறுவனத்தின் பிரதிநிதி எஸ்.ஜென அண்மையில் நாட்டிவைத்தார். வீடமைப்பு வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ற-52)

# ஊடகவியலாளர் சிவராமின் ஸிம் காட் சந்தேக நபரிடம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப் பட்டுள்ள நபருக்கு இந்தக்கொலை சம்பந்தமாக நன்கு தெரிந்திருந்தது என கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக தற்காலிகமான ஆதராங்கள் தம்மிடம் இருப்பதாக அதிகாரிகள் கடுவெல நீதிவானிடம் கூறியுள்ளார்கள். கொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கையடக்கத் தொலைபேசியின் ஸிம் காட் இந்தச் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரைக் கடத்திச்சென்ற வாகனத்தைப் பின் தொடர்ந்த ஜீப் வண்டியைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளார்கள். சந்தேக நபர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இவ்ரைப் பிணையில் விடுமாறு விடுத்த கோரிக்கையை மறுத்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(அ-2)

# சுனாமி மீள்கட்டமைப்புக்கான அமெரிக்க நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது

## யு.எஸ்.எயிட் நிறுவன சிரேஷ்ட ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி மீள் கட்டமைப்பிற்கென அமெரிக்க அரசும், நிறுவனங்களும் வழங்குகின்ற நிதி முழுமையாகச் செலவிடப்படுகிறது. மற்றவர்கள் கூறுவதைப் போலன்றி இது எமக்கு உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது இதை நான் எமது நாட்டு காங்கிரசிலும் எடுத்துக்கூற முயற்சிப்பேன் இவ்வாறு யு.எஸ்.எயிட் நிறுவன சர்வதேச விவகார சிரேஷ்ட ஆலோசகர் ஜோர்ஜ் ஏ.டெய்லர் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் முற்றாக அழிக்கப்பட்ட மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு இளைஞர் தொழில் பயிற்சி நிலையத்தை 80 இலட்சம் ரூபா செலவில் யு.எஸ்.எயிட் நிறுவனம் புனரமைத்து வருகின்றது இப் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட வருகைதந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜோர்ஜ் ஏ.டெய்லர் தலைமையில் 6 பேர் கொண்ட யு.எஸ்.எயிட் நிறுவன பிரதிநிதிகள் இங்கு விஜயம் செய்திருந்தனர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் பொன் செல்வநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (அ-7)

# நாட்டை அபிவிருத்தி செய்ய நிலையான ஆட்சி அவசியம்

(கொழும்பு)

நாட்டில் நிலையற்ற அரசாங்கம் ஒன்று இருப்பது நாட்டின் எதிர்கால நடவடிக்கைகளுக்குப் பாதிப்பாக அமையும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் அபிவிருத்தி ஒன்றை ஏற்படுத்துவதற்காக நிலையான அரசாங்கம் ஒன்று தெளிவான கொள்கையுடைய தலைமைத்துவத்துடன் இருப்பது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர்களுடனான சந்திப்பொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கருஜெய சூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

130 ஆசனங்களுடன் வலுவான ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை ஜனாதிபதி கலைத்துவிட்டு பலமற்ற அரசாங்கத்தை நடத்தி வருகின்றார் என குறிப்பிட்ட கரு ஜெயசூரிய, நாட்டுக்கு சிறந்த நிலையான அரசாங்கம் அவசியம் என்று தெரிவித்த அதேவேளை சிறந்த தேசியக் கொள்கை ஒன்றும் அவசியம் என கூறியுள்ளார். (அ-2)

# பாடசாலை நேரத்தில் கற்பிப்பதற்கு மாணவரிடம் கட்டணம் அறவிடத்தடை

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் பாடநேரத்தில் மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிட்டு பாடபோதனைகளை மேற்கொள்ளுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் சகல பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணங்களும் அறவிடாது கல்வியை வழங்குவதே கல்வியமைச்சின் பொறுப்பாகும்.

எனினும் அரசாங்கத்தின் இந்தக் கொள்கைக்கு மாறாக பாடசாலை நேரத்தில் சில பாடங்களைக் கற்பிப்பதற்காக மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவதாகவும், பாடசாலை ஆசிரியர்கள் தவிர்ந்த வெளி நபர்கள் இவ்வாறான கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் கல்வியமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான ஏற்பாடுகள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்று பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் குறித்த சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்தால் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை சேவைக்கமர்த்த முடியும்.

எனினும் இதற்காக வேண்டி மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணங்களையும் அறவிடாது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலமாக அல்லது வசதிகள் சேவைக்கட்டணத்திலிருந்து ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும் என்றும் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் அறிவிப்பு

வாடிக்கையாளரின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்துள்ளார். எனவே எரிபொருள் தட்டுப்பாடு பற்றி மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்புப் பகுதியில் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக கொழும்புக்கு வெளியே எரிபொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டது.

மிக விரைவில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். கொழும்புத்துறைமுகத்திற்கு 20 ஆயிரம் லீற்றர் பெற்றோலும் 20 ஆயிரம் லீற்றர் டீசலும் ஏற்றிக் கொண்டு இரண்டு கப்பல்கள் வந்து சேர்ந் துள்ளன.

இன்றிலிருந்து போதுமான அளவு பெற்றோல் நாடு பூராவும் விநியோகிக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார். (து-2)

## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

இலங்கை ஆசிரியர் சேவையின் யாப்பு விதிகளுக்கமைய அச்சேவையின் இரண்டாவது வகுப்பில் முதலாவது தரத்தில் இருந்து முதலாவது வகுப்புக் கு பதவி உயர்த்துவதற்காக நடைபெறும் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 31ஆம்திகதியென முன்னர் அறிவுறுத் தப்பட்டது. ஆனால் இதற்கான விண்ணப்ப திகதி2005.9.2ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சகல தபால் நிலையங்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-126)

# அரசியல் பழிவாங்கலுக்குள்ளான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள்


## 87 ஆயிரம் என கரு ஜெயசூரிய அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கட்சி ஆதரவாளர்கள் 87 ஆயிரம் பேர் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்களை தெளிவூட்டும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில், எதிர்வரும் மாதங்களில் இது தொடர்பான தகவல்களை பரிசீலனை செய்து உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தப்பிளவும் இல்லை என்றும் இந்த நாட்டை முன்னேற்ற குறைந்த பட்சம் 15 ஆண்டுகளுக்கான செயற்திட்டத்தை வகுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (து-9)





நெதர்லாந்தில் இடம்பெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான விளையாட்டுப்போட்டி நிகழ்விலிருந்து...

# அரசாங்கப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தொடக்கம் மேம்பாட்டுத் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தொடக்கம் பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் எனும் புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கெண்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்றினை கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் ,பெற்றோர்கள் ,பழைய மாணவர்கள் உட்பட பாடசாலை சமூகத்தினரின் பங்களிப்புடன் பாடசாலைகளின் சகல நடவடிக்கைகளையும் திட்டமிடுவதற்கு ஏற்ற வகையில் புதிய பாடசாலை மேம்பாட்டு வேலைத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவ அணி ஆகிய இரண்டு நிர்வாகக் கட்டமைப்புக்கள் பாடசாலைகளில் நிறுவப்படவுள்ளன.

இந்த இரண்டு கட்டமைப்புக்களுமே பாடசாலை தொடர்பான சகல அபிவிருத்தி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் வகுக்கவுள்ளது.

இந்தத் திட்டத்தினை முதற்கட்டமாக நாட்டின் எட்டு-மாகாணங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட எட்டு கல்வி வலயங்களிலும் சகல தேசிய பாடசாலைகள், நவோதயா பாடசாலைகள் மற்றும் மத்திய கல்லூரிகளில் அறிமுகம் செய்ய கல்வியமைச்சு உத்தேசித்துள்ளது.

இதன் பிரகாரம் கொழும்பு, யாழ்ப்பாணம்,சிலாபம், கேகாலை, அம்பலாங்கொட,வெள்ளவாய, பத்தேகம ,தம்புத்தேகம ஆகிய எட்டு வலயங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (அ-9)

# சந்நிதி உற்சவம் இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

காலைத் திருவிழாக்கள் காலை 8.00மணிக்கும், மாலைத் திருவிழாக்கள் 4.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

சப்பறத் திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை இரவு 7.00 மணிக்கும் தேர்த்திருவிழா 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கும் தீர்த்தத் திருவிழா 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ந-9)

# சமாதான நீதிவான் நியமனம்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த இராமசாமி குலசேகரம் நீதியமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி எஸ். நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் 1994 ஆம் ஆண்டிலும் 2000ஆம் ஆண்டிலும் கொழும்பில் போட்டியிட்ட இவர் தலைசிறந்த நடிகரும்,விளையாட்டு வீரரும்,சமூக சேவையாளருமாவார். (ந-52)

## இன்று ஒரு தகவல்

# படிப்பு

"அறிவுத் தேவையை விட கவனக்குறைவு தான் அதிக கஷ்டத்தை உருவாக்கிவிடுகிறது" என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறார். அதனால் ஏட்டுப் படிப்பும் வேண்டும். அனுபவப் படிப்பும் வேண்டும். இவை இரண்டும் இருந்தால்தான் வாழ்க்கைச் சக்கரம் சுலபமாக ஓடும்.

இன்று படிப்பதற்குத் துணையாக நிற்பவை புத்தகங்கள். பள்ளிக்கூடத்தில் சரியாகப் படிக்காவிட்டால் தலையில் இருப்பது மூளையா களிமண்ணா? என்று கேட்பது வழக்கம். ஆனால் முதல் புத்தகமே களிமண்ணாகத்தான் இருந்தது என்பதை நினைத்து ஆறுதல் அடையலாம்.

ஆமாம்! புத்தகங்கள் முதலில் களிமண் சுவடியாகத்தான் ஆரம்பித்தன. எங்கே? மொசபத்தேமியாவில் களிமண்ணில் தான் எழுத்துக்களைப் பதித்தார்கள். அதன் பின்பு கட்டையில் பதித்தார்கள். பின்பு கல்லில் பதித்தார்கள். இப்போது அச்சாகவே பேப்பரில் பதிக்க ஆரம்பித்துவிட்டோம். பேப்பரில் பதிப்பவை எல்லாம் நெஞ்சில் பதிகிறதா? என்பதுதான் கேள்வி.

அது இருக்கட்டும். களிமண் படிவத்தில் பெரிய காப்பியங்களைக் கூடப் பதிவுசெய்து வைத்திருந்தார்களாம். பேப்பரில் எழுதும் பழக்கம் எகிப்தில் ஆரம்பமானது. **Cyprus papyrus** என்று ஒரு செடி. அதிலிருந்து **papyrus** செய்து அதில் எழுதினார்கள். இது வெளிநாடுகளுக்குக் கூட ஏற்றுமதி ஆனது.

ஒருமுறை எகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னரிடம் சண்டை போட்டுக்கொண்டு இந்த ஏற்றுமதியை நிறுத்திவிட்டார். உடனே அந்த நாட்டு மன்னர் யோசித்தார். தோலில் எழுத ஆரம்பித்துவிட்டார். கால்நடைகளின் தோல் இதற்கு உபயோகப்பட்டது. இன்று நாம் வலது பக்கமாக ஆரம்பித்து இடதுபக்கமாக படித்துக் கொண்டு போகிறோம் அல்லவா? 14 ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள்தான் இதற்கு வழிகாட்டினார்கள்.

15ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியர் ஒருவர்தான் அச்சடிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். இன்று நிறையப் புத்தகங்களை அச்சடித்துக் கொண்டிருக்கி றோம். அதைப் படிக்கிறார்களா? இல்லையா என்பது பற்றிக் கவலைப்படாமல் அச்சடிக்கிறோம். **Bacon** என்ன சொல்கிறார் தெரியுமா? சில புத்தகத்தை சுவைக்க வேண்டுமாம். சிலதை விழுங்கிவிடவேண்டுமாம் சிலதை ஜீரணம் செய்து விடவேண்டுமாம். இப்படிச் சொன்னால் அதை அப்படியே அர்த்தம் செய்து கொண்டு ருசி பார்க்க ஆரம்பித்துவிடக்கூடாது.

அவர் புத்தகம் என்று சொன்னால் அதில் கூறப்பட்ட கருத்தை சுவைக்க வேண்டும் என்று அர்த்தம். படிப்பது வேறு சுவைப்பது வேறு. படிக்க வேண்டிய சில இருக்கிறது. பார்க்க வேண்டிய சில இருக்கிறது. கற்க வேண்டிய சில இருக்கிறது. திருக்குறளைக் கற்றேன் என்று கூற வேண்டும். திருக்குறளைப் பார்த்தேன் என்று சொல்லக் கூடாது. ஏதோ புரட்டிப் பார்த்துவிட்டு தூக்கிப் போட்டதாக ஆகிவிடும்.

தினசரிப் பத்திரிகை வாங்குகிறோம். பேப்பர் பார்த்தேன் என்று சொல்கிறோம். இன்று பேப்பர் வாங்கி கற்றேன் என்றா சொல்வது? நூறு,இருநூறு வருடங்களுக்கு முன்பு கூட யாராவது இறந்தால் கூட அவர்கள் படிப்பார்கள் என்ற நம்பிக்கையில் சில புத்தகங்களையும் சேர்த்து புதைப்பது சில நாடுகளில் வழக்கமாக இருந்தது.

நமது ஊரிலும் சிலர் செத்தால் புத்தகம் வைத்துப் புதைத்தால் பரவாயில்லை போலிருக்கிறது. இருந்த வரைதான் எதையும் படிக்கவில்லை .இனியாவது படி என்று சொல்வது போல. இவ்வளவும் ஏன் சொல்கிறேன் என்றால் படிப்பு மிகவும் முக்கியம் என்பதைக் கூறத்தான். படிக்கின்ற பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்குப் பரீட்சை நெருங்குகிறது நன்றாகப் படியுங்கள்.

பரீட்சை வருகிறது என்றால் சிலர் அடுத்தவர்களை நம்பி இருப்பதும் உண்டு அது மிகவும் தவறு. ஒருவர் அப்படித்தான் அடுத்த வீட்டுக்காரரிடம் சொன்னார் "சார்! பரீட்சை வருகிறது. உங்கள் மகனை நன்கு படிக்கச் சொல்லுங்கள்" என்றார். "என் மகன் மீது உங்களுக்கு அவ்வளவு அக்கறையா?" என்றார் அவர். "அதற்கில்லை சார். உங்கள் மகனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துதான் என் மகன் பரீட்சை எழுதுவான் அதனால் சொன்னேன்" என்றார் இவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பிரதமர் மஹிந்தவுக்கு எதிராக ஐ.தே.க தொடர் பிரசாரங்கள்

(கொழும்பு)

பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமாகிய மஹிந்த ராஜபக்ஷவிற்கெதிராக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறது.

பிரதமர் தனது சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையையே புறக்கணித்து அதனை வறுமைக்குள் இட்டுச் சென்றுள்ள வேளையில்,சுனாமி நிவாரணமாக கிடைத்த நிதியையும் சந்தேகத்திற்கிடமான முறையில் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் இட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ஜோன்சன் பெர்னாண்டோ, பந்துல குணவர்த்தன ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு மேற்படி தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி,பிரதமர்களான ஆர்.பிரேமதாஸ, ரணில் விக்கிரசிங்க ஆகியோர் இந்நாட்டிற்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ளனர். மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு என்ன செய்தார்? குறைந்தது அவரின் சொந்த மாவட்டத்தைக்கூட அவர் கவனிக்கவில்லை. அங்குள்ள மக்கள் இன்னமும் கூடாரங்களுக்கு கீழேயே வாழ்கிறார்கள் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், டீசலுக்கு வற்வரி நீக்கப்பட்டதற்குப் பதிலாக பெற்றோலுக்கு நீக்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் வைரங்களுக்கு வற்நீக்கம் செய்கிறது. இவை பணக்காரர்களுக்கு மேலும் நன்மை பயப்பனவாகும். பணக்கார நாடுகள் வழங்கிய நிவாரண நிதி சாதாரண மக்களுக்கு பயன்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ந-6)

## வெற்றிகரமாக நடைபெறும் மகாநெகும திட்டம்

(கொழும்பு)

இந்த நாட்டில் கிராம மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் வீதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் வீதி அபிவிருத்தித் திட்டமான மகாநெகும சுமார் 60 வீதம் தமது பணியை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் முதல் கட்டமும் இரண்டாம் கட்டமும் வேகமாகவும் வெற்றிகரமாகவும் இடம் பெறுகின்றன என்று இந்தத் திட்டத்தின் தேசிய அமைப்பாளர் ஜெனி ஹெட்டிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 23 கிலோ மீற்றர் தூரமுள்ள மாத்தறை திஹகொட வீதி புனரமைக்கப்படுவதற்கு 285 கோடி ரூபாவும் மாத்தறை கொட்டப்பொல வீதி புனரமைக்கப்படுவதற்கு 385 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சின் வழிகாட்டலில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எந்தவிதமான முறைகேடுகளும் இடம்பெறவில்லை என ஹெட்டிட்டிய தெரிவித்துள்ளார். (து-2)

## 'ஸ்கிறபிள்' அறிமுகக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"ஸ்கிறபிள்" தொடர்பான அறிமுகக் கருத்தரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்.மாவட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்கள், "ஸ்கிறபிள்" பொறுப்பாசிரியர்கள் மற்றும் தரம் 10-13 வரையான 5மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் 'ஸ்கிறபிள்' அறிமுகம், சுற்றுப்போட்டி தொடர்பான விடயங்கள் பற்றி அறிவுறுத்தப்படவுள்ளன.

இதுதொடர்பான மேலதிக விபரங்களை டபிள்யு. மயூரன் (021.222.3553),எஸ்.சிவமைந்தன் (021.222.3932), அல்பேட் நிமலன்(021.222 7698) ஆகியோருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாமென யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ந-2)

## சேவையை உறுதிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

3வருட சேவையைப் பூர்த்தி செய்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்கள் தங்கள் பதவியை உறுதிப்படுத்துமுகமாக உரிய படிவங்களை விரைவாக வலயத்தில் கையளிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வஇராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (அ)

## அரச ஊழியருக்கு கடன் வசதி 45 நாட்களுள் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிக கடன் வசதிகளை வழங்கவென ரூபா 20 இலட்சத்தை ஒதுக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக புதிய சுற்று நிருபம் ஒன்று விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சரியான தகவல்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு 45 நாட்களுக்குள் கடன் வசதிகள் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் அமைச்சின் செயலாளருக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுவது அவசியமாகும்.

காணிக்கொள்வனவுக்கு மேலதிகமாக வீடுகளையும் காணிகளையும் வாங்கவென அரசாங்க ஊழியர்கள் கடன் வசதிகளைப் பெறமுடியும் என்று அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)







கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையுரையாற்றுவதை முதலாவது படத்திலும் நல்லை ஆதீன முதல்வர், அமெரிக்காவிலிருந்து வருகை தந்த சூரியப்பெருமாள் பாலசிங்கம் தம்பதியினர் மற்றும் லண்டனிலிருந்து வருகை தந்த ம.ஜெயசீலன் தம்பதியினரை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:ஞா. ஐங்கரன்)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## பெஷன் நகரில் அறுபடை வீடு

என்.விஜயன்

46 பெஷன் நகரிலுள்ள அஷ்டலக்ஷ்மி கோயிலில் தரிசனத்தைமுடித்துக்கொண்டு, அறுபடை முருகன் கோயிலுக்குச் சென்றோம்.

அஷ்டலக்ஷ்மி கோயிலுக்கு மிக அண்மித்த தூரத்தில் அறுபடை முருகன் ஆலயம் உள்ளது. கடலோரத்தை அண்மித்ததாக அறுபடை முருகன் கோயில் அமைந்துள்ளதாயினும், அஷ்டலக்ஷ்மி கோயில் போன்று கடலோரத்திற்கு மிக அண்மித்ததாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பத்துப் பரப்பளவைக்கொண்ட காணியில் அறுபடை வீடுகள் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் முன்னகத்தே கருங்கல்லால் செதுக்கப்பட்ட மிக நீளமான வேல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கருங்கல்லின் உதவியுடன் கட்டப்பட்ட அறுபடை வீடுகளிலும் மேல்தளத்தில் ஓடுகள் எதுவு மேகிடையாது. எல்லாமே சீமெந்தாலான தளக் கூரைகள். இந்த அழகு மிகு காட்சியைக்காண ஆயிரம் கண்வேண்டுமெனலாம்.


முருகப்பெருமான் குடியிருக்கும் அறுபடை வீட்டிற்கும் செல்வதற்கு வசதியில்லாதவர்கள், பெஷன் நகரில் உள்ள அறுபடை வீட்டிற்கும் சென்றால் போதுமானதென்பது அங்குள்ளவர்களின் கருத்து.

அஷ்டலக்ஷ்மி கோவிலில் இருந்து அறுபடை முருகன் கோயிலுக்குச் சென்றபோது நேரம் நண்பகல் 12.30ஐ கடந்து விட்டதால், ஆலயத்திற்குள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஆலயத்தின் வெளிப்புற வாயிலில் நின்றவர் நாம் உள்ளே செல்வதைத்தடுத்தார். ஐயா! நாம் சிலோனில் இருந்து வந்திருக்கின்றோம்... மெதுவாக அந்த நபரிடம் கூறினோம். சிலோன் என்றதும் எமக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டானது.

விரைவா வந்திடுங்க... கூறியபடியே முகப்புவாயில் கதவை திறந்து விட்டார்.

ஔவைக்கு நாவல் பழம் கொடுத்து உதவிய கந்தப்பெருமானே அந்த வாயிலில் நின்று நம்மை உள்ளே அனுப்பிவைத்தார் என நினைத்துக்கொண்டு,



அறுபடை முருகனையும் ஒரு கணத்தில் தரிசித்து வீட்டு வெளியேறினோம்.

சென்னை மாநகரை சுட்டெரித்துக்கொண்டிருக்கும் கத்திரி வெய்யில் நம்மையும் வதைத்துக் கொண்டது.

எம்மை கோயிலுக்குச் செல்ல அனுமதித்தவருக்கு நன்றிகூறி விட்டு, அங்கிருந்து நடக்கத் தொடங்கினோம்.

எம்முடன் வந்திருந்த திரு. சற்குருநாதன் தனக்குத்தெரிந்த திரு.விக்டர் என்பவர் பெஷன் நகரில் இருப்பதாகவும், அவரை சந்தித்துவிட்டு போகலாம் எனவும் கூறினார். அவர் கூறியதை அனைவரும் ஏற்றுக்கொண்டோம்.

ஏற்கனவே நாம் பெஷன் நகர் வந்திருக்கும் செய்தியை திரு. விக்டருக்கு சற்குருநாதன் தெரிவித்திருக்க வேண்டும். அவரே எம்மை தேடிவந்து விட்டார். அன்பு நிறைந்த வரவேற்பு, அருகில் உள்ள கடையில் எல்லோருக்கும் சோடா வாங்கித்தந்தார்.

கத்தரி வெய்யிலின் களைப்பிற்கு அவர் தந்த சோடாவை ஔவைப்பாட்டியின் வார்த்தையில் கூறுவதாயின் 'எல்லாம் பெறும்' எனலாம். எல்லோருமாக திரு. விக்டரின் வீட்டிற்குச் சென்றோம். வேலணைத் தீவகத்தில் இருந்தவர் திரு.விக்டர்.

தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வை அடுத்து அவர் இந்தியாவுக்கு வந்துவிட்டார்.

அவரின் மூத்த மகன் மிகச் சிறந்த இசையமைப்பாளராக இருக்கின்றார். நயினாதீவு நாகபூசணி அம்மன் மீது பாடப்பெற்ற பாமாலைக்கு இசை அமைத்தவர் அவரே.

தீவகத்தில் இருந்து தமிழகத்திற்குச் சென்ற விக்டர், கலைஞர் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக்கழகத்தின், விசுவாசத்திற்குரியவராக இருக்கின்றார்.

கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் ஆகியோருடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்கு அவர் முயற்சி செய்தாராயினும் அப்போது நடந்த காஞ்சிபுர இடைத்தேர்தல் காரணமாக அது சாத்தியமற்றுப்போயிற்று.

திரு. விக்டரின் வீட்டில் தரப்பட்ட குளிர்பானத்தை அருந்தினோம். சுதந்திரன் பத்திரிகை உள்ளிட்ட பல்வேறு பத்திரிகை நறுக்குகளை சேகரித்து வைத்திருக்கும் அவர், தனது சேமிப்புக்களை நமக்குக் காட்டுவதில் திருப்தியடைந்துகொண்டார்.

(திங்கள் வளரும்)



## பாரம்பரிய கலாசார கிராமங்களின் அபிவிருத்தி காலத்தின் தேவை

(கொழும்பு)

திறந்த பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் தாக்கத்தால் தற்போது கிராமங்களுக்கும், விகாரைகளுக்கும் இடையில் இடைவெளி ஒன்று நிலவுவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கலாசாரம் மிக்க கிராமங்களை அபிவிருத்தி செய்யவேண்டியது காலத்தின் தேவையென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


புண்ணிய கிராம செயற்திட்டத்தை ஒட்டி நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது பண்டைய வரலாற்றில் கிராமங்களில் பிரதானமாக விகாரைகளே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

விகாரைகளுக்கே கல்வி கற்பதற்காகச் சென்றனர். அந்தக் காலத்தில் வேறு பாடசாலைகள் இருக்கவில்லை. எந்தவொரு பிரச்சினைக்கும் விகாரைத் தலைமைத் தேரர்களே தீர்வுகண்டனர்.

அன்று கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. இன்று பல்வேறு காரணங்களினாலும், திறந்த பொருளாதாரம் போன்ற பல்வேறு தாக்கங்களினாலும் நவீன உலகில், நவீன வாழ்க்கையில் பல்வேறு தாக்கங்களினால் கிராமங்களுக்கும் விகாரைகளுக்கும் இடைவெளி அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-9)



ஆடி அமாவாசை தினமான நேற்று வில்லூன்றி புனித தீர்த்தக்கேணியில் பிதிர்க்கடனை நிறைவேற்றுபவர்களைப் படத்தில் காணலாம்.

# வடக்கு - கிழக்கிற்கு பூரண நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தடையாகவுள்ள சட்டப்பிரச்சினைகளை அமெ.தீர்க்க வேண்டும்

## வோஷிங்டன் கூட்டத்தில் கஜேந்திரகுமார் எம்.பி வலியுறுத்து

***'இலங்கை ஆழிப்பேரலையைத் தொடர்ந்து மனிதாபிமான நிவாரணத்தைப் பயனுறுதியுள்ள முறையில் வழங்குவதற்கான சவால்களும் முயற்சிகளும்' எனும் விடயம் அமெரிக்கச் சட்டமாமன்ற மனித உரிமை அமைப்பினால கடந்த ஜுலை 27ஆம் திகதி புதன்கிழமையன்று வோஷிங்டனின் கெபிட்டல் ஹில்லின் றேபேர்ன கட்டடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான சுருக்க விளககத்தினபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரை.***



அமெரிக்கச் சட்டமாமன்ற உறுப்பினா டன்னி கே.டேவிஸ் (DIL) ஸ்ரீவ் சாபொட (R-OII) உடன் சேர்ந்து சுருக்கவிளக்கத்துக்குக் கூட்டாகத் தலைமைதாங்கினார். ரஷ் ஹெரால்ற், டேவிட் பிறைஸ், டையேன் வற்சன ஆகிய பிரதிநிதிகளும் சுருக்க விளக்கத்தில கலந்துகொண்டனர். குழாம் நேர்வோத் தூதுவா நட் வொல்லேபேக், இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக, பேராசிரியர் ஒபேர்ஸ்ற், வைத்திய கலாநிதி காருண்யன் அருளானந்தன் ஆகியோரையும் யுஎஸ்எய்ட், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (IOM) ஆகியவற்றைச சேர்ந்த அலுவலர்களையும் உள்ளடக்கியது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு ஆற்றிய உரையின முழுவடிவம்:

தவிசாளர் டேவிஸ் அவர்களே, தவிசாளர் சாலாட் அவர்களே, அமெரிக்கச் சட்டமன்ற உறுப்பினர்களே:

முதலாவதாக, இலங்கைத் தீவின் தளநிலைவரம் பற்றி, அதிலும் குறிப்பாக, அத்தீவின் தமிழ் பேசுகின்ற வடக்குக் கிழக்கின் தளநிலைவரம் பற்றி உங்களுக்குத் தெரிவிப்பதற்கும் எனது சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும் என்னை அழைத்தமைக்காக மனித உரிமை அமைப்புக்கு நான் நன்றிகூற விரும்புகின்றேன்.

### வட - கிழக்கை பாதித்த சுனாமி

இச்சந்தர்ப்பத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு-கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வருகை தந்தமைக்காகச் சட்டமாமன்ற உறுப்பினர் டேவிஸ் அவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்க விரும்புகின்றேன். ஏற்பட்ட அழிவையும் அவலத்தையும் தாங்கள் நேரடியாகக் காண்பதற்கு இயுலச செய்த தங்கள் வருகை, நிவாரணப் பணியைத் திட்டமிடுவதிலும் நிறைவேற்றுவதிலும் அளப்பிரிய உதவியாக இருக்குமென நான் உறுதியாக நம்புகின்றேன்.

தங்கள் வருகை விசேடமாக, சூறையாடப்பட்ட தமிழ்ப் பகுதியான வடக்குக் கிழககுக்கு உலகின் முக்கிய தலைவர்கள வருகை தருதலைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் மட்டுமீறிய. முயற்சியினை மேற்கொண்டிருந்த ஒரு வேளையில் இடம்பெற்றதனால், தங்கள் வருகை இந்நெருக்கடியான, துரதிஷ்டவசமான நேரத்தில் எமது மககளின் மனதில் உள்ளக் கிளர்ச்சியை ஏறபடுத்தியதென்பதைச் சொல்லத் தேவையில்லை.

வடக்குக் கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்கள இத்தீவில் ஏற்பட்ட அழிவின் 60%க்குக் கூடியதற்கும் மொத்த உயிரிழப்புகளில் ஏறக்குறைய மூன்றிலிரண்டு பங்கிற்கும் ஆளாகின. கடந்த இரண்டு தசாப்தகால யுத்தத்தின விளைவாக ஏற்கெனவே இப்பிராந்தியத்தின உட்கட்டமைப்பும் பொருளாதாரமும் முழுமையாக அழிக்கப்பட்டதனால அளவற்ற துயரததை அனுபவித்து வந்த மக்களுக்கு இது பாரதூரமான ஒரு மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கியது.

யுத்த நிறுத்தத்தின்போது எமது மக்கள தமது ஜீவனோபாயத்துக்காகத் திரட்டக்கூடுமாயிருந்த கொஞ்சநஞ்சமும் இப்போது இயற்கை அன்னையின் சீற்றத்தால் சூறையாடப்பட்டுவிட்டன. இப்பின்னணிதான் வடக்குக் கிழக்கில் பேரழிவின் தாக்கத்தை எல்லா அம்சங்களிலும் குறிப்பாக, மேலும் மோசமானதாக்குகின்றது.

### புரிந்துணர்வு உடன்படிக்கை

இலங்கைத் தீவை ஆழிப்பேரலை தாக்கிய காலம் இடர்மிகுந்த ஒரு காலமாகும். சமாதானச் செயற்பாடடின் மூன்றாண்டுகள் இந்நாட்டில் சமச்சீரற்ற விளைவுகளைத் தோற்றுவித்தன. சிங்களப் பெரும்பான்மைத் தெற்கு சமாதானத்தின் ஆதாயப் பங்குகளை அனுபவித்த அதேவேளையில், யுத்தத்தால் ஆகக்கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமான வடக்கு-கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்கள் அவற்றை அனுபவிக்கவிலலை.

இலங்கை அரசாங்கத்திறகும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின பரதான குறிக்கோள்களில் ஒன்று வழமை நிலைமைகளை உருவாக்குதல் என்ற போதிலும், மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் தமிழப் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் வழமை நிலைமை என்பது மிகத் தொலைவான ஒரு கனவாகவே தொடர்கின்றது. யுத்த நிறுத்த உடன்படிக்கையால் கட்டளையிடப்பட்டவாறு குடிமக்களின் தனிப்பட்ட ஆதனங்களிலிருந்தும் பொதுக்கட்டடங்களிலிருந்து இலங்கை ஆயுதப்படைகளை விலக்கிக் கொள்ளல் இதுவரை நடைபெறவில்லை. இதன் விளைவாக அகதிகளாக உள்நாட்டிலும் இடம்பெயர்ந்தவர்களாகவுமுள்ள இலட்சக்கணக்கான குடிமகள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாதுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையால் கட்டளையிட்டவாறு துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைதல் இதுவரை நடைபெறவில்லை. மாறாக, இலங்கை ஆயுதப்படைகள் புதிய துணைப்படைகளைப் பாதுகாத்தும் ஊக்குவித்தும் வந்துள்ளன. இதன் விளைவான கொலைகளும் அச்சமளிக்கின்ற சம்பவங்களும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாரதூரமான முறையில் இடருக்குள்ளாக்குகின்றன. இச்சம்பவங்கள் எல்லாம குறிப்பிடத்தக்க வகையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்குக் கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளிலும் உயிர்வாழ்வதற்கான தேவைகளிலும் கவனஞ்செலுத்தும் பொருட்டு ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான (ISGA) ஆலோசனைகளைச் சமர்ப்பித்து ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், தற்போதைய அரசாங்கம் 2004 ஏப்ரலில் ஆட்சிக்கு வந்த பின்னர் முன்னைய அரசாங்கம் விட்ட இடத்திலிருந்து பேச்சுவாாததைகளை மீண்டும் தொடங்குவதற்குத் தவறிவிட்டது.

தூதுவரையும் பேச்சுவார்த்தைக் குழுவில ஓர் உறுப்பினராகக் கொண்டிருந்த முன்னைய அரசாங்கம் விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை மளத் தொடங்க உடன்பட்டிருந்த அதேவேளையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செய்யத் தவறியது. ஆழிப்பேரலை இத்தீவைத் தாக்கியவேளையில் யுத்தம் நெருங்கி வந்துவிட்டதென்ற உணர்வு நிலவியமைக்கு மேற்கூறியவை எல்லாம் பங்களித்தன.

### இடைக்கால நிர்வாகசபை

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையென்பது, மக்களின் விருப்பம்தான் அரசாங்கத்தின் அதிகாரமாக இருக்கவேண்டுமென்று கூறுகின்ற அனைத்துலக மனித உரிமைப் பிரகடனததின் 21(3) ஆம் உறுப்புரையையும் பயனுறுதித்தன்மையென்ற சர்வதேச சட்டக்கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டதென்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்கின் 70% ஐ விடுதலைப்புலிகள் சொந்தக் காவல்துறை, நதித்துறை, சுங்கத்துறை, குடிவரவுத்துறை ஆகியவற்றைக்கொணடு ஆட்சிபுரிகின்றதென்பதை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையில நீதித்துறையின் -சுதந்திரம் ஒப்புக்கொளளப்பட்டுள்ளது. சட்ட ஆட்சி போற்றிப் பேணப்பட்டுள்ளது. மனித உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சிவில் சமூகத்தின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அரசுக்கும் சமயத்துக்கும் இடையிலான பிரிவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, பேச்சுவார்த்தைகள் மீளத் தொடங்கப்படுமென்ற நம்பிக்கை மிகக் குறைவாகத் தோன்றியதும் யுத்தநிறுத்த உடன்படிக்கை, தானே அதிகரித்த அளவில் உறுதி குலைந்து கொணடிருந்ததுமான ஒரு வேளையில்தான் இயற்கை அன்னையின் சீற்றம் வெடித்தது. ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுத்திய அளபபாிய மனித அவலத்தின் மத்தியிலும் இப்பேரழிவிலிருந்து ஆககபூர்வமானதொன்றைக் காணக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டது. அரசியல சார்பற்ற, மனிதாபிமானப் பதிற செயலாற்றுதலென்ற வகையில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சேர்ந்து செயற்படுவதற்கு முன்னர் காணப்படாத ஓர் இடைவெளியை ஆழிப்பேரலை தோற்றுவித்ததென சர்வதேச சமூகம் சரியான முறையில் கண்டுணர்ந்தது.

இயற்கையின் சீற்றம் சமாதானத்தையும் மீள் இணக்கத்தையும் தூண்டுமென் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவலமான முறையில், ஆனால் அவ்வளவு ஆச்சரியத்தை அளிக்காதவகையில், ஆழிப்பேரலையைத் தொடர்ந்த ஆறு மாதங்கள் தரப்புக்களை மேலும இருமுறைப்படுத்தியுள்ளதுடன், சமாதானச் செயற்பாடு மேலும் சீர்குலைவதற்கும் வழிவகுத்தன.

### விடுதலைப்புலிகளின் உடன் நிவாரண, புனர்வாழ்வுப் பணி

ஆழிப்பேரலை தாக்கியபோது விடுதலைப்புலிகள் சற்றும் தாமதிக்கவில்லை. ஆட்களும் பொருள்களுமென்று அதற்கிருந்த எல்லா வளங்களையும் கொண்டு 25 ஆண்டுகால யுத்தத்தின்போது ஒத்த மனிதாபிமான நெருககடிகளைக் கையாள்வதற்குத் தோற்றுவிக்கப்பட்ட மிகத் திறமையானதும் ஈடுபடுத்தியும் பரீட்சித்தும் பார்க்கப்பட்டதுமான எதிர்த்துச் சமாளிக்கின்ற முன்றகளின் அடிப்படையில், மாவட்ட மடடத்தில் அரசாங்க அதிகாரிகளுடனும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனும், ஐ.நா முகவர் நிறுவனங்களுடனனும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தியதுடன், அதன் செயற்பாட்டைக் கடுங் கண்டிப்புடன் கண்காணித்தும் வந்தனர்.

பாதிக்கப்படட உள்ளூர்ச் சமூகத்தை ஆதாரமாகக கொணட இக்கட்டமைப்பு நிவாரண மறறும் புனரமைப்புச் செயல்முறைக்கு அவர்களை உரித்தாளிகளாக்கியது. மேலும் அது நிவாரணத்திற்கும் புனரமைப்பிற்கும தளராது தொடர்கின்ற வளர்ச்சிக்கும் இடையிலான இணைப்பை ஒப்புக்கொள்ளுதலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. விடுதலைப்புலிகளின் முன்முயற்சிக்குப் பதிலளிப்பாக அரசாங்கம், முரண்பாட்டுக் கூருணர்வென்ற கோட்பாட்டை முற்றாகப் புறக்கணித்து இராணுவமயப்படுத்துவதன மூலமும் அதன் கட்டுப்பாட்டை மீளமையப்படுத்துவதன் மூலமும் நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொணடது. அத்துடன் நில்லாது விடுதலைப்புலிகளின் நிராயுதபாணிகளான முக்கிய அரசியற் பிரிவினரை இலக்குவைத்த துணைப்படை நடவடிக்கைகளும் அதிகரிக்கபபட்டன. இராணுவக் கடடுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கிழக்கு அரசியற்பிரிவுப் பொறுப்பாளரும் கிழக்கு மாகாண ஆழிப்பேரலை இணைபபாளருமான கௌசல்யனின் படுகொலை அத்தகைய அநேக சம்பவங்களில ஒன்றுதான்.

### பொதுக்கட்டமைப்பு

கடந்த 50 ஆண்டுகளில் பரவலாகப் பெற்ற கடந்தகால அனுபவங்களுடன் இணைந்ததான இப்பின்னணியில், வெவ்வேறு பிரதேசங்களும் ஆளாகிய சேதங்களுக்கு விகித சமமான முறையில் சர்வதேச நிதி உதவிகளும ஏனைய உதவிகளும், நியாயமாகவும் ஒப்புரவாகவும் பகிாந்தளிக்கப்படுமென்ற அரசாங்கத்தின் புனிதப் பிரகடனங்களைத் தமிழர் நம்பமுடியாதிருந்தனர்.

தமிழரின் நியாயமான கவலைகளைச சர்வதேச சமூகமும் ஒப்புக்கொண்டுள்ளது. மேற்கூறப்பட்டவற்றின் நிமித்தம் சமாதானச் செயற்பாடடை மீளத் தொடங்குவதற்கு சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்குப் பங்களிக்கக்கூடியதாக, அரசாங்கமும விடுதலைப்புலிகளும் ஒன்றாகச் செயற்படுகின்ற பொதுக்கட்டமைப்புப் பொன்று வடக்கு கிழக்குக்கு உருவாக்கப்படவேண்டுமென சர்வதேச சமூகம் முன்மொழிந்தது. அதன் விளைவுதான் சுனாமிக்குப் பிநதிய தொழிற்பாட்டு முகாமைத்துவக கட்டமைப்பு (P-TOMS) உடனபடிககையாகும்.

இதற்கு யு.எஸ் அரசாங்கம உட்பட சர்வதேச சமூகத்தின வெளிப்படையான ஆதரவு உண்டு எனினும், இதற்குச் சிங்கள அரசியற் சமூகத்தின் கருத்தெதிர்லை கவலையும் அதிர்ச்சியும் அளிப்பதாயுள்ளது. ஒரு மார்க்சிஸ தீவிரவாதக் கட்சியான ஜே.வி.பி.யினதும் பௌத்த குருமாரின் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவினதும் தலைமையில் சிங்களத் தேசியவாதிகள் கடற்கரையிலிருந்து 2 கிலோ மீற்றர் பரப்பல் நிவாரணப் பணியைக் கையாள்வதற்கான ஓர் எளிய நிருவாக இயந்திரமான பொதுககட்டமைப்பு கைச்சாத்திடப்படுதலை ஆவேசமாக எதிர்த்தனர்.

அது அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழருடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளைத் திரும்பத் திரும்ப முறித்துக்கொண்ட நினைவை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிடடபோதிலும தமிழர் உள்ளத்தில் மீண்டும் கொண்டுவந்தது.

### சிங்கள பேரினவாதிகளின் போக்கு

இருபதாண்டு ஆயுத மோதலில் 60,000 மக்களுக்கும் கூடியவர்கள் மரணமடைந்துள்ள போதிலும், ஆழிப்பேரலையின் அனர்த்தத்தினால் 30,000 மக்களுக்கும் கூடியவர்கள் இறந்துவிட்டபோதிலும், தமிழருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்குச் சிங்கள அரசியற் சமூகத்தின் மறுப்பு இன்றும் குறையாது தொடர்கின்றது.

இச் சிங்கள தேசியவாதிகள் உயர் நீதிமன்றத்தை நாடியபோது, அது சுனாமிக்குப் பிநதிய தொழிற்பாட்டு முகாமைத்துவக் கடடமைப்பு உடன்படிக்கையின் நான்கு முக்கிய சரத்துக்களுக்கு பூர்வாங்கத்தடை ஆணையை வழங்கியதன் மூலம் உண்மையில் அதனைச் செயலிழக்கச் செய்தது. தமிழர் மீதான சிங்கள மேலாட்சி நீடித்து நிலைத்திருப்பதற்கு முன்னணியில் செயற்பட்ட சிங்களத் தேசியவாதச் சக்திகள் இம்முறை உயர் நீதிமன்றத்துக்கான முறையீட்டை நாடியதுடன், தமது இலக்குகளை எய்துவதற்கு இலங்கை அரசியலமைபபைச் சானறாகக் காட்டி அதில் வெற்றிகண்டுமுள்ளமையைக் காத்திரமான முறையில் கவனத்திற் கொள்ளவேண்டும்.

### இலங்கை அரசியலமைப்பு

இச்சந்தர்ப்பத்தில் நான் இலங்கை அரசியலமைப்பின் மீது கருத்தைச் செலுத்த விரும்புகின்றேன். இலங்கை அரசியலமைப்பை ஆக்குதலில் தமிழர் ஒருபோதும் பங்குபற்றவோ, அதற்கு ஒப்புதல் அளிக்கவோ இல்லை. யு.எஸ் சுதந்திரப் பிரகடனம் '... அரசாங்கங்கள் ஆளப்படுபவர்களின் ஒப்புதலிலிருநது அவற்றின் நியாயமான அதிகாரங்களைப் பெறுகின்றனவாக மக்கள் மத்தியல் தாபிக்கப்படுகின்றன' என்று கூறுகின்றது.


ஒவ்வொரு அரசியலமைப்பும் மக்கள் அதற்குத் தமது ஒப்புதலை அளிப்பதன் மூலம் மட்டும்தான் அதன் சட்டபூர்வமான தன்மையைப் பெறுகின்றது. தமிழர் இலங்கை அரசியலமைப்புக்குத் தமது ஒப்புதலை வழங்கவில்லை. அவர்களுக்கு இலங்கை அரசியலமைபபின் பால் எவ்வித கடப்பாடுமில்லை. உண்மையில் தமிழர் தம் மனக்குறைகளை வெளிபடுத்துவதற்கும பரிகாரம் தேடுவதறகும் அரசியல் ரீதியாக இடமளிக்காத இலங்கையின் அரசியலமைப்புத்தான் ஆயுத மோதலுக்குப் பிரதான காரணமாயுள்ளது. இறைமை என்பது மக்களிடம் உள்ளதேயன்றி, அரசு என்றழைக்கபபடும ஓர் அருவப் பொருளிலல்ல. சிங்கள அரசியல் சமூகம் அதன் அரசியலமைப்பின்மீது காட்டுகின்ற விசுவாசமானது தமிழர்மீது சிங்கள அரசியற் சமூகத்தின் மேலாட்சியைப் போறறிப பேணுவதற்கான அப்பட்டமான ஒரு முயற்சியேயன்றி வேறல்ல.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழரின் அவசரத் தேவைகளில் கவனஞ் செலுத்துவதாயினும் சரி, அல்லது பரந்த சமாதானச் செயல்முறையிலாயினும் சரி, தமிழருடன் கூட்டு முயற்சியொன்றில் ஈடுபடுவதற்கான விருப்போ அதிகாரமோ சிங்கள அரசியற் சமூகத்துக்கு இல்லையெனபதைத் தெற்கில் கடந்த ஆறுமாதங்களில் இடம்பெற்ற அரசியல் சம்பவங்கள் மீண்டும் விளக்கிக் காட்டியுள்ளன.

(...ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவுடன் இராணுவ கூட்டு இல்லை

## பிரதமர் மன்மோகன்சிங் அறிவிப்பு



(புதுடெல்லி)

அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டு இல்லையென மக்களவையில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங் சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தபோது அணு சக்தி தொடர்பாக அதிபர் புஷ்ஷுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அந்த ஒபபந்தத்துக்கு பா.ஜ மற்றும் இடதுசாரி கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. அந்த ஒப்பந்தத்தை விளக்கி மக்களவையில் மன்மோகன சிங் அறிக்கை தாக்கல் செய்தார். அந்த அறிக்கை மீது மக்களவையில் நேற்று முன்தினம் விவாதம் நடந்தது.

அதில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கலந்துகொண்டு பேசினார். அவர் பேசியதாவது,

இந்தியா எபபோதுமே சுதந்திரமான அணு சக்தி கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருக்கிறது. அதனால்தான் நாம் பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்த முடிந்தது. அணுசக்தி மின்நிலையங்களை உருவாகக முடிந்தது. புற்றநோய் சிகிச்சைக்கு அணு சக்தியைப் பயன்படுத்த முடிந்தது. அந்த அணுசக்தி கொள்கை நம்மீது திணிக்கப் படவில்லை. 2003இல் ஏற்பட்ட ஒருமித்த கருத்துக் காரணமாக உருவாக்கப்பட்டது.

இப்போது அமெரிக்காவுடன் இந்தியா செய்துள்ள ஒப்பந்தம் அந்த வசதிகளை நமக்கு கொடுக்குமா என்பதை பிரதமரிடம இருந்து அறிய விரும்புகிறேன்.

அமெரிக்கா உட்பட மற்ற வல்லரசுகள் இந்தியாவை ஒரு அணு ஆயுத நாடாக ஏற்க வில்லை. சிவில் உபயோகத்துக்கும் இராணுவ உபயோகத்துக்கும் அணுசக்தியை தனித்தனியாக இந்தியா பயன்படுத்துவதை அமெரிக்க ஒப்பந்தம் அனுமதிக்குமா? என்பது தெரியவேண்டும். பயங்கரவாதம் நிறைந்த இந்த உலகில் நமது தேசிய நலனைப் பாதுகாக்க நாம் எந்த வசதியைப் பயன்படுத்துவோம் என்று சொல்லமுடியாது.

அமெரிக்காவுடன் செய்துள்ள இந்த ஒப்பந்தத்தால் நாம் அணு ஆயுதங்களைத் தயாரிக்கமுடியாது. அதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும. இந்த ஒப்பந்ததில் இந்தியாவுக்கு மறைமுக நிபந்தனைகள் எதையும் அமெரிக்கா விதித்திருக்கிறதா என்பதையும் பிரதமர் மன்மோகன சிங் தெளிவுபடுத்தவேண்டும் இவ்வாறு பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்டு தலைவர் பிரபோத பந்தாவும் விவாதத்தில் கலந்துகொண்டு பேசினார்.

அவர் பேசும்போது, அமெரிக்கா இந்த ஒப்பநதம் மூலம் தனது உலகளாவிய பேராசையை நிறைவேற்றிக்கொள்ள இந்தியாவை ஒரு துணைப் பங்குதாரர் ஆக்கியுள்ளது என்றார்.

சுமார் 4மணி நேரம் நடந்த விவாதத்துககு பதில் அளித்துப் பிரதமர் மன்மோகன சிங் அங்கு பேசியதாவது,

நாம் எந்த நாட்டுடனும் இராணுவ ஒப்பந்தம் செய்துகொள்வில்லை. நாம் நமது அணுசக்தி திட்டத்தை யாரிடமும் சரண் அடையவிடமாட்டோம். நமது அணு ஆயுதத் தயாரிப்பு திட்டத்தில் எந்த நாட்டுடனும் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அமெரிக்காவுடன் இந்தியா நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தால் சீனாவுடன் உள்ள உறவு தேயும் என்று யாரும் எண்ணவேண்டாம். சீனா மிகப்பெரிய நமது அண்டை நாடு. ஆசியாவில் அமைதி வளம் கொழிக்க நாம் கம்யூனிஸ்டு நாடான சீனாவுடன் நெருங்கிய நட்புறவு ஏற்படுத்துவோம்.

1991இல் நான் தாக்கல் செய்த மத்திய பட்ஜெட்டுக்கு பிறகு எனக்கு பெரும் சவாலாக இருந்தது. தற்போது மேற்கொண்ட அமெரிக்க பயணம்தான்.

அமெரிக்காவின் கட்டுப்பாடான தடைகளை நீக்கிய பிறகு நாம் அடுத்த 10, 15 ஆண்டுகளில 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் மெகாவாற அணுமின்சாரத்தை தயாரிக்க முடியும். எனவே, இந்தியா, அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் பற்றி யாரும் அச்சமோ, கவலையோ படத்தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார். (ற)

WORLD NEWS

உலக தரிசனம்

# சுனாமி எச்சரிக்கை அமைப்பின் 1வது தலைவராக இந்தியா!

(அவுஸ்திரேலியா)

அடுத்த ஆண்டு ஜுலை மாதம் முதல் தொடங்கும் சர்வதேச சுனாமி எச்சரிக்கை அமைப்பின் முதலாவது தலைவர் இந்தியாவிலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதனை ஐ.நா.சபையின் சர்வதேச நாடுகளுக்கு இடையேயான கடலியல் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் பாட்ரீசியா பெர்னல் தெரிவித்துள்ளார். (ற)

# 'என் மீதான கற்பழிப்பு புகார் நிரூபிக்கப்பட்டால் என்னை கல்லால் அடித்துக் கொல்லட்டும்'

## சதுர்வேதி சாமியார் பரபரப்பு அறிக்கை

இருபெண்களுடன் ஏற்பட்ட போட்டியால் என்மீது கற்பழிப்பு புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த புகார் நிருபிக்கப்பட்டால் கல்லால் அடித்துக் கொல்லட்டும் என்று சதுர்வேதி சாமியார் பரபரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

சென்னை நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய செக்ஸ் சாமியார் சதுர்வேதி பற்றி இப்போது புதிய் தகவல்கள் வெளியாகி உள்ளன. இரு பெண்களுக்கு போட்டி நடந்தது பற்றிய பரபரப்பு விவரங்களை சாமியார் சதுர்வேதியே வெளியிட்டுள்ளார்.

சி.பி.ஐ விசாரணை கோரி சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் இது பற்றிய விவரங்களை அவர் கொடுத்துள்ளாா. சென்னை தியாகராயநகர் பசுல்லா ரோடு 48 ஆம் எண்ணில் ஆசிரமம் நடத்தியவர் சதுர்வேதி சாமியார். ஆர்.வெங்கடேஸ்வரன் என்கிற எஸ்.ஏ.ஆர்.பிரசன்ன வெங்கடாச்சாரியர் சதுர்வேதி என்பது இவரது முழுப்பெயராகும். சென்னை ஆழ்வார்பேட்டை டி.டி.கே. ரோட்டைச் சேர்ந்த தொழிலதிபர் சுரேஷ், - சதுர்வேதி சாமியார், எனது மனைவி கீதா, மகள் மது ஆகியோரை கடத்தி செக்ஸ் தொல்லை கொடுப்பதாக கொடுத்த புகாரையடுத்து சதுர்வேதி சாமியார் கைது செய்யப்பட்டார்.

இவர்மீது தற்போது கடத்தல், கற்பழிப்பு, பலாத்காரம், கொலைமிரட்டல், பணமோசடி உள்ளிட்ட 7வழக்குகள் பதிவு செய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தன்மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறுக்கும் சதுர்வேதி சாமியார் இது தொடர்பான உண்மை விவரங்களை வெளியே கொண்டுவர சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டு சென்னை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்துள்ளார்.

அவர் கைப்பட எழுதி உள்ள கடிதத்தில் இதுதொடர்பாக கூறி இருப்பதாவது,

என்மீது போடப்பட்டுள்ள 7வழக்குகளும் பொய் வழக்குகளாகும். முதல் வழக்கு ஒரு குடும்பத்தகராறு. புகார் கொடுத்த சுரேஷின் அக்கா வித்யா எல்லோரிடமும் இருந்து தனியாக பிரித்து தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும என்ற ஆசையால் என்னிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட சுரேஷின் மனைவி கீதா, மகள் மது இருவரையும் பிரித்து, சந்தேகக்காரரான சுரேஷைத் தூண்டிவிட்டு குடும்பத்தில் பல குழப்பங்களைச் செய்தாள்.

அதன் கிளைமாக்ஸ்தான் இந்த புகார் சம்பவம். கீதாவும், மதுவும் உறவினர்கள் ஒருபுறம், பொலிஸ் மறுபுறம் என சூழ்நிலைக் கைதியாக இருக்கிறார்கள். மது என் பின்னாடியே ஒன்றரை வருடம் சுற்றி என்னுடனேயே இருக்கவேண்டும் என்ற பிடிவாதத்தால் பல முறை தற்கொலைக்கு முயன்று நாங்களேதான மருத்துவமனையில் சேர்த்தோம். இந்த உண்மையெல்லாம் சொல்லும் நிலையில் அவர்களும் இல்லை.

பொலிஸூம் இதை சொல்லவிடாது. எனவே மேற்கொண்டு 6 பொய் வழக்குகளைப் போட்டு குண்டர் சட்டமும் போடப்பட்ட நிலை யில் என் அப்பா சி.பி.ஐ கேட்டு பெட்டிசன் போடடார். அவர் பயமுறுத்தப்பட்ட பிறகு பின் வாங்கினார்.

பிறகு என் அன்பர்கள் சி.பி.ஐ விசாரணை கோரினார்கள். இறுதியில் நான் சி.பி.ஐ கோாி பெட்டிசன் போட்டு அட்மிஷன் ஆகியுள்ளது. பொலிஸால் ஏழு என்ன 77 கேஸ்கள் போட்டு அதற்கு 7000 சாட்சிகளையும் தயார் செய்ய முடியும்.

வித்தியாவும் சுரேஷூம் முன்னாள் நீதிபதியின் பேரப்பிள்ளைகள். பணம், பதவி, செல்வாக்கு, பொலிஸ் அதிகாரம் எல்லாம் சேர்ந்து இதில் விளையாடுகிறது. கீதாவும் மதுவும் மிகவும் நல்லவர்கள். தெய்வப் பற்றுளளவர்கள், மனசாட்சிக்கும் பயந்தவர்கள.

என்மேல் கடத்தல், கற்பழிப்பு, பலாத்காரம், கொடுமை, கொலை மிரட்டல், பண மோசடி என சுரேஷ் கொடுத்த புகார்கள் சி.பி.ஐ விசாரணையில் நிருபிக்கப்பட்டால் பெண்கள் விடுதலை இயக்க உறுப்பினர்கள் ஒன்று திரண்டு வந்து என்னைக் கல்லால் அடித்துக் கொல்லட்டும். நூற்றுக்கணக்கான பெண்களைக் கடவுள் அவதாரம் என்று கூறிக் கறபழித்திருப்பதாக பொலிஸ் கூறுகிறது. பெண்கள் உரிமை சங்கங்கள் இதுவரை ஏன் போராட்டம் நடத்தவில்லை? போராடி என்னை சி.பா.ஐ விசாரணைக்கு உட்படுத்தட்டும். தவறு செய்தவர்கள் யாரோ அவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். வாசுகி, சுதா ராமலிங்கம் போன்றவர்கள் இதில் கவனம செலுத்தவேண்டும். அதுவும் உடனேயே. இவ்வாறு அவர் எழுதி உள்ளார்.



சுரேஷ் மற்றும் அவரது அக்கா வித்தியா, அவரது மகள் ஜனனி ஆகியோர் சதுர்வேதி சாமியாருடன் எடுத்துக் கொண்ட பழைய படம்.

ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில் சதுர்வேதி சாமியார் கூறி இருப்பதாவது,

திருச்சியில் பிறந்த நான் பின்னர் கோவையில் பள்ளிப் படிப்பை தொடர்ந்தேன். அதன பின்னர் பி.ஏ பொருளாதார பட்டமும், எம்.ஏ. சமஸ்கிருதம், எம்.ஏ. தத்துவ இயல் பட்டமும் பெற்றேன். கர்நாடக மாநில திறந்த வெளி பல்கலைக்கழகத்தில் படிதது இந்தப் பட்டங்களைப் பெற்றேன். வேதம் சம்பந்தமாக பல்வேறு பிரசங்கங்களைச் செய்துள்ளேன். இதில் கவரப்படடு ஏராளமான பக்தாகள் என்னைத் தேடி வந்தனர்.

இதையடுத்து நான் முதலில் கோவையிலும் பிறகு சென்னையிலும் ஆசிரமம் தொடங்கிணை ஏழைகளுக்கு உதவி செயதேன். இதற்காக நான் யாரையும் பலவந்தப்படுத்தி நிதி உதவி பெறவில்லை. ராமானுஜ மிஷன் டிரஸ்ட, ஸ்ரீபாஸ்யா கரா டிரஸ்ட் ஆகியவற்றை தொடங்கி வைஷ்ணவ மத வழிபாடு, உபன்யாசம் செய்துவந்தேன்.

எனக்கு கிடைத்த பல்வேறு பக்தர்களில ஆழ்வார்பேட்டையைச் சேர்ந்த பி.சுரேஷூம் ஒருவர். 2ஆண்டுகளுக்கு முன் அவர் தனது சகோதரி மற்றும் குழந்தைகளுடன் எனது ஆசிரமத்துக்கு வந்து பல்வேறு பணிகளில் பங்கு கொண்டாா். எஸ்.ஆர்.எம்.டிரஸ்டுக்கு பல சொத்துக்களையும் வாங்கிக் கொடுததார்.

சுரேஷூக்கும் அவரது மனைவிக்கும் குடும்பத்தகராறு ஏற்பட்டது. இதையடுத்து எனது புகழைக்கெடுக்கும் வகையில் அவரது மனைவி மகளை கடத்தியதாக புகார் கொடுத்தார். அவரது மனைவி, மகளுக்கு செக்ஸ் தொல்லை கொடுத்ததாகவும் பொயய புகார் கொடுத்தாா். இதில் உண்மை நிலையை அறிய சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்த மனுமீது சென்னை ஐகோர்ட்டில் விசாரணை நடந்து வருகிறது. (ற)

# ஈரானில் பிரபல நீதிபதி சுட்டுக் கொலை

(டெக்ரான்)

ஈரான் நாட்டின் பிரபல நீதிபதி ஹசன் மொகாதாஸ். அரசியல் சம்பந்தமான பல முக்கிய வழக்குகளில் தீர்ப்பு சொன்னவர் இவர்.

நேற்றுமுன்தினம் பணிமுடிந்து இஸ்லாமிய நீதிமன்ற கட்டடத்தில் இருந்து இவர் காரில் புறப்பட்டார். அவரே காரை ஓட்டிச் சென்றார். அப்போது மோட்டார்சைக்கிளில் வந்த ஒருவன் அவர் மீது 2 முறை கைத்துப்பாக்கியால் சுட்டான். இதில் முதல் குண்டு அவரது தலையில் பாயந்து உயிரிழந்தார். சுட்டவன் தப்பிவிட்டான்.

அக்பர் கன் என்ற பத்திரிகையாளருக்கு ஒரு அரசியல வழக்கில் 5 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கினார் ஹசன். தமக்கு விதித்த தண்டனையை எதிர்த்து கடந்த 53 நாட்களாக கன் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அதற்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் உண்டா? அல்லது வேறு அரசியல் வழக்கு இதற்குக் காரணமா? என்று பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ற)

# வடக்கு- கிழக்கிற்கு பூரண....

(...6ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சர்வதேச சமூகத்துக்குள்ள பொறுப்பு


விடுதலைப்புலிகளுடன் நல்லெண்ணத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதை விடுத்து, சிங்கள அரசியற் சமூகம் தமிழ் மக்களின் கூட்டு விருப்பைச் சீரறுப்பதற்கும், சிதறடிபபதற்கும் அதனாலான எல்லாவற்றையும் தொடர்ந்தும் செய்துவருகின்றது. உண்மையில் இதுவே ஆட்ட நிலைமையாயுள்ளபோது, சமாதானச் செயல்முறையானது வலுவற்ற அதிகாரச் சமநிலையை ஆதாரமாகக் கொணடுள்ளதென்பதையும் அதனை மாற்றவோ ஒருபக்கம் சரிக்கவோ கூடதென்பதையும் சர்வதேச சமூகம் ஒப்புக்கொள்ளவேண்டியது அடிப்படையில் அத்தியாவசியமானதாகும்.

'அடுத்து என்ன?' என்பதுதான் சர்வதேச சமூகத்தின் முன்னாலுள்ள கேள்வி?, அதற்கிணங்க சர்வதேச சமூகம் ஒரு சில மறுக்க முடியாத உணமைகளை எதிர்கொள்ளவேணடுமென்று நான் அழுத்தமாக வற்புறுத்த விரும்புகின்றேன். அதாவது, இலங்கைத் தீவில் சமாந்தரமான இரண்டு அரச கட்டமைப்புகள் உள்ளன; ஒன்று இலங்கை அரசாங்கத்தின் ஆணையின் கீழ் உள்ளது. மற்றையது விடுத்லைப்புலிகளின் ஆணையின் கீழ் உள்ளது.

ஆழிப்பேரலைக்குப் பிந்திய உடனடி மீட்புப பணியைப் பொறுத்தவரையில், நிகழ்வுகள் தாராளமாக விளக்கிக்காட்டுகின்றவாறு இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகள ஆட்சிபுரியும் வடக்குக கிழக்கு நிருவாகதுதுடன் சேர்ந்து பணியாற்ற விருப்பமற்றதாக அல்லது முடியாததாக இருப்பின், விடுதலைப்புலிகளின் ஆட்சிப் பிரதேசங்கள் உட்பட வடக்குக் கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் உதவியை இழந்துவிடாதிருத்தலை உறுதிப்படுத்துவதற்குச் சாவதேச சமூகம் புத்தாக்க நடவடிக்கைகளைத் தேடவேண்டும்.

எனவே, அதற்கிணங்க, ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் வடக்குக் கிழக்கின் எலலாப் பகுதிகளுக்கும் எல்லா வகையான உதவிகளையும் நேரடியாகவும் ஒப்புரவாகவும் துரிதமாகவும் வழங்குவதற்கு அதற்குத் தடையாயுள்ள ஏதேனும் சட்டப் பிரச்சினைகளைத் தீத்துக்கொள்ள வேண்டுமென அழுத்தமாக வற்புறுத்தப்படுகின்றது. (ற)

## புகைபிடிக்கும் கணவன்மார்களால் பெண்களுக்கு பக்கவாத ஆபத்து...!



புகைப்பிடிக்கும் பழக்கம் குறிப்பிட்ட அந்த நபரை மட்டுமல்லாமல், அவரைச் சுற்றி இருக்கும் அப்பாவிகளையும் பாதிக்கும். இன்னும் சொலலப்போனால் புகைப்பிடிப்பவர்களைக் காட்டிலும், அவர்கள் வெளிவிடும் புகையைச் சுவாசிக்கும் 'செகண்ட் ஸ்மோக்கிங்' நபர்களுககுத்தான் பாதிப்பு அதிகம். அந்த வகையில் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்ட கணவன்மார்களைக் கட்டிக்கொண்ட பெண்களின் பாடு திண்டாட்டம் தான். கணவன்மார்களின் புகைப்பழக்கத்தால் அவர்களின் இரத்த நாளங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நாளடைவில் பக்கவாத ஆபத்து ஏற்படும் என்கிறார்கள் நிபுணர்கள்.

சீனாவில் இது தொடர்பாக ஒரு ஆய்வு நடந்துளளது. 40 முதல் 70 வயது வரையிலான 60 ஆயரத்து 377 பெண்கள் இதில் கலந்துகொணடனர். அப்போது கணவன்மார்களின் புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் பெண்களின் உடல்நலம் பாதிப்பு பற்றி துல்லியமாகக் கணக்கிட்டுப் பார்த்த போதுஅதிர்ச்சிகரமான தகவல்கள் தெரியவந்தன.

அதாவது புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாத கணவன்மார்களைப் பெற்ற பெண்களைவிட புகைப்பழக்கம் உள்ள கணவன்மார்களின் மனைவிமார்கள் பக்கவாத நோயால் பாதிக்கப்பட 47 சதவீதம் கூடுதல் வாய்ப்பு இருந்தது. கணவன்மார்கள் பயன்படுத்தும் புகைப்பொருட்களின் எணணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பாதிப்பு அளவும நேர் விகிதத்தில் கூடிக்கொண்டே போகிறது. அதேசமயம் ஏற்கனவே புகைப்பழக்கம் இருந்து பின்னர் அதைக் கைவிட்ட கணவன்மார்களின் மனைவியருக்கு அவ்வளவாகப் பாதிப்பு இல்லை.

புகைப்பிடிக்கும் அன்பர்களே! வயது வந்த பெண்களுக்கே இந்தக் கதி என்றால், பச்சிளம் குழந்தைகள், பள்ளிப் பருவ குழந்தைகளின் நிலைமையை நீங்களே யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## பூமியைத் துளையிட்டு மறுபுறம் வரமுடியுமா?



பூமியின் விட்டம் 12 ஆயிரத்து 800 கிலோ மீற்றர். அதைத் துளைத்துச் சென்று மறுபக்கம் வெளியே வரவேண்டுமானால் 12ஆயிரத்து 800 கலோ மீற்றர் தோண்ட வேண்டும். அறிவியல் தொழில் நுட்பம் வெகுவாக முன்னேறி, சந்திரனுக்குச சென்றடைந்த இந்தக் காலத்திலும் பூமியை 13 கிலோமீற்றர் ஆழமே தோண்ட முடிந்துள்ளது.

பூமியை சில மீற்றர் தூரம்தான் கிணறு வெட்டுவது போல் வெட்ட முடியும். அதற்கு கீழே பூமியில் பாறைகளுள்ளன. அவற்றிற்கும் கீழே கொதி நிலையில் இரும்புக் குழம்பு உள்ளது.

பூமியைச் சிறிது சிறிதாகத் தோண்டும்போது ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் வெப்பமும் அழுத்தமும கூடிக்கொண்டே போகும். பூமியின் மையப் பகுதி 4 ஆயிரத்து 500°C வெப்பத்துடன் கொதித்துக் கொணடிருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.

எனவே, இன்றைய நிலையில் பூமியைத் துளைத்துச் செல்வது இயலாததொன்று எனினும், வருங்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சியால் இதையும் சாதிக்க முடிந்தாலும் முடியலாம். அதற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகலாம்.

## இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் தியானம்



தியானம் மூலம் இரத்த அழுத்தத்தைக் குறைக்க முடியும் என்பது ஓரளவுக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் சாதாரண தியானம் மூலம் இதைச் சாதிக்க முடியாது என்றும், அதற்கு 'Transcendental meditation' என்ற மருத்துவ முறை சிறப்பாகக் கைகொடுக்கும் என்றும் அமெரிக்க நிபுணர்கள் கூறுகின்றனர்.

இயற்கையான முறையில் இரத்த அழுத்தத்தைக் குறைக்க விரும்புபவர்களுக்கு இக் குறப்பிட்ட தியானம் நல்ல பலனைத் தரும்.


இந்தத் தியானத்தை செய்வதற்கு உங்களுடைய வாழ்க்கை முறையையோ, தத்துவம் மற்றும் மத சம்பந்தமான நம்பிக்கை என எதையுமே மாற்றத் தேவையில்லை. நீங்கள் நீங்களாகவே இருக்கலாம். ஆனால் அதற்குப் பதில் உடம்பையும், மனதையும் அமைதியாக இருக்கச் செய்தால் போதும்.

தினந்தோறும் 20 நிமிடத்தை ஒதுக்கி தியானம் செய்து வந்தால் போதும். உயர் இரத்த அழுத்த பிரச்சினை படிப்படியாக குறையும். மனம் மற்றும் உடல் என இரண்டுமே அமைதி நிலையை எட்டுவதால், உடலில் சக்தி சேமிக்கப்பட்டு முன்னிலும் சுறுசுறுப்பாக செயல்பட முடியும். சிந்தனைத் திறன் மற்றும் கவனம் பன்மடங்கு அதிகரிக்கும்.

*தன் உள்ளத்திலிருந்து பொங்கி எழும் கோபத்தை நாகப்பாம்பு சட்டையை உரிப்பதைப் போல உதறிவிடக் கூடியவனே உண்மையில் மனிதன் என்று சொல்லத் தக்கவன்.*

*-வால்மீகி ராமாயணம்*

## குறுக்கெழுத்துப் போட்டி இல-70



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப போடடி இல - 70**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:-08, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ......................................................
முகவரி :- ......................................................
......................................................
......................................................

இங்கே வெட்டுக ------------------------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 11ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)இரகசியம் - இதனை இப்படியும் சொல்லலாம். (4)தாரமிழந்தவன் - இப்படி அழைப்பர். (6)மனிதனைப் பலவீனப்படுத்துவதில இதுவுமொன்று. (7)ஒரு பறவை (வ.இ). (8)பீலி (10)தழும்பு. (11)கடலும் கடல் சார்ந்த இடமும்.

### மேலிருந்து கீழ்

(1)'இவன் வரும் போது அவனியீல் யார் துணை' என்று பாடல் வரி உண்டு. (2)பிரசித்தி பெற்ற பௌத்த வணக்கத்தலம். (3)இதில் அறுபத்துநான்கு உண்டு. (5)ஒருவகைக் கீரை. (8)ஆபரணங்களிலொன்று. (9)குழவி என்றும் அழைப்பர்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.68 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.பாரதியார் 4.பதி 5.பாராட்டு 6.அனல் 7.தந்தி 8.சாமை 11.பாலை 12.வானம்படி

**மேலிருந்து கீழ்**

1.பாகுபாடு 2.திருட்டாந்தம் 3.விதி 4.பன்னசாலை 9.மைல் 10.கோவா


### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | வி.இளங்கோ<br>கோப்பாய் தெற்கு,<br>கோப்பாய். |
| இரண்டாம் பரிசு | :- | என்.அபிராமி<br>நெல்லண்டை,<br>பருத்தித்துறை. |
| மூனறாம் பரிசு | :- | திருமதி.பா.செல்வராணி<br>பொதுநூலகம்,<br>சங்கானை. |

**போடடியில கலந்துகொண்டு பாராட்டுபபெறும் அதஷ்டசாலிகளன் பெயர் வபரம்**

கே.அரசேஸ்வரன், நல்லூர். சி.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. வி.செல்வநாயகம், புத்தூர். வே.குமாரசுவாமி, கரவெட்டி. ப.சிவசூரியர், சங்கானை. க.ஞானோதயன், தெல்லிப்பளை. க.குருநாதன், கோண்டாவில். க.பிரதீபன், வடமராட்சி, து.நக்கீரன், மல்லாகம். ம.ஜனா, இணுவில். L.கீர்த்திகா, உடுப்பிட்டி. பி.தவ்வியா, நல்லூர். தா.பிரணவன், சண்டிலிப்பாய். லோ.அபிராம், வல்வெட்டி. கைதாரணி, கைதடி. S.கஜசங்கவி, இணுவல். சொ.நித்தியா, கொக்குவில். வே.இராகவன், மிருசுவில். வி.சுந்தரன, யாழ்ப்பாணம். இ.ராஜன், வல்வெட்டி. வ.நிசாந்தன், நாவாந்துறை. கா.காண்டீபன், ஏழாலை. ச.திவ்வியசசி, சித்தன்கேணி. வ.சுதர்சன், யாழ்ப்பாணம். பி.ராகவி, கம்பர்மலை. வி.சந்தியா, சண்டிலிப்பாய். அ.அஜீத், வரணி.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு



இராவணனுக்கு சிறுநீரை அடக்கமுடியாமல் அல்லல் ஏற்பட்டது. கையில் சிவலிங்கத்தை வைத்துக்கொண்டு சிறுநீர் கழிக்கக் கூடாது. விநாயகப் பெருமான் ஒரு பிரம்மசாரி பிராமணச் சிறுவனாக வந்தார். இராவணன் அச் சிறுவனைப் பார்த்து "அப்பா! இந்த சிவலிங்கத்தைக் கையில் வைத்துக்கொள். சிறுநீர் கழித்துவிட்டு வந்து வாங்கிக்கொள்வேன்." என்று கூறிக்கொடுத்து விட்டு சிறுநீர் கழிக்கலானான். சிறுநீர் ஆறாகப் பெருகிக்கொண்டிருந்தது. அவனால் அதை நிறுத்த முடியவில்லை. "பத்துத்தலை! பத்துத்தலை! பத்துத்தலை!" என்று மூன்று முறை விநாயகர் அழைத்தார். அழைத்தும் அவன் வராமையினால் சிவலிங்கத்தைக் கீழே வைத் துவிட்டார். இராவணன் சிறுநீர் கழித்துவிட்டு கை. கால் அலம்பிக்கொண்டு வந்து பார்த்தான். சிவலிங்கம் தரையில் வைக்கப்பட்டதைக் கண்டான். அவனுக்குச் சினம் மூண்டது. அச் சிறுவன் தலையில் ஓங்கி ஒரு குட்டு குட்டினான். விநாயகர் காட்சி கொடுத்து மறைந்தார். இராவணன் சிறுநீர் கழித்த இடம் ஒரு குளமாக இன்றும் இருக்கிறது. அதன் கரையில் உள்ள விநாயகப் பெருமான் தலையில் ஒரு பெரிய பள்ளம் இருக்கிறது.

அடியார்கள் அப் பள்ளத்தில் சந்தனம் வைத்து வழிபடுகிறார்கள். இராவணன் சிவலிங்கத்தை எடுக்க முயன்றான். அது எழவில்லை. அது பசுவின் காதுபோல் குழைந்துவிட்டது. அதனால் கோகர்ணம் என்ற பெயர் உண்டாயிற்று. வெள்ளிமலையை அள்ளி எடுத்த இராவணனால் எடுக்க முடியாத காரணத்தால் மஹாபலேச்வரர் என்ற நாமம் இறைவனுக்கு ஏற்பட்டது.

கோகர்ணத்தில் சிவராத்திரியன்று சிறப்பான வழிபாடு நடைபெறுகிறது. இத்தலத்தை நீண்ட காலமாகத் தரிசிக்க வேண்டும் என்று எண்ணினேன். பண்டைத் தவப்பயனால் அன்பர்களுடன் 17-2-1952 இல் புறப்பட்டுச் சென்றேன். மங்களூர் போய் உடுப்பி என்ற தலத்தைத் தரிசித்தோம். அங்கு சந்திரன் சிவபெருமானை வழி பட்டதனால் இறைவன் ஸோமநாதேச்சுரர் என்ற திருநாமத்துடன் விளங்குகின்றார்.

### உடு-நக்ஷத்திரம்; பதி-தலைவன்

நக்ஷத்திரங்களுக்குத் தலைவனாகிய சந்திரனுக்கு உடுபதி என்று பெயர். சந்திரன் பூசித்தபடியால் இத்தலத்திற்கு உடுபதி என்று பெயர். உடுபதி என்பது உடுப்பி என மாறிவிட்டது. இத்தலத்தில் வடக்குரத வீதியில் கண்ணபிரானுடைய திருக்கோயில் மிகவும் அழகாக விளங்குகிறது.

### மூகாம்பிகை

அங்கிருந்து கொல்லூர் மூகாம்பிகையின் திருத்தலத்தை அடைந்தோம். அத்தலம் மைசூர் மாகாணத்தில் துங்காநதிக்கரையில் விளங்குகிறது. செழிப்பான வனம். பசுமையான பாக்கு மரங்கள்; குளிர்ந்த காற்று.

கோயில் வெளிப் பிராகாரத்தில் என்னுடன் வந்த தேவ கோட்டை ராமநாதன் செட்டியாருடைய நான்கு வயதுடைய பாலசுப்பிரமணியன் என்ற குழந்தை சிறுநீர் கழித்துவிட்டான். உடனே கோயில் அர்ச்சகர்கள் கோயிலைப் பூட்டிவிட்டார்கள். அவர்களைப் பார்த்து நான். "ஏன் கதவை அடைத்துவிட்டீர்கள்" எனறு கேட்டேன். "இந்தக் குழந்தை ஒன்றுக்குப்போய் விட்டான். பிராயச்சித்தம் செய்ய வேணடும்" என்றார்கள். நான் அவர்களைப் பார்த்து "எங்கள் பக்கத்தில் உள் பிராகாரத்திலேயே ஒன்றுக்குப் போவார்களே!" என்றேன்.

அவர்கள் "இந்தக் கோயில் புனிதமானது. பிராயச்சித்தம் செய்வதற்கு 24ரூ. கொடுக்க வேண்டும்" என்றார்கள். தன் மகன் ஒன்றுக்குப்போய் 24ரூ. தண்டச்செலவு வைத்தான் என்று செட்டியார் வருத்தப்பட்டுக்கொண்டே பணத்தை எடுத்துக்கொடுத்தார்.

ஆறு பிராமணர்கள் இருந்து 3.மணிநேரம் வேதமந்திரங்களைச் சொல்லி முழக்கினார்கள். வாஸ்துசாந்தி செய்தார்கள். இதைக்கண்டு செட்டியார். தான் கொடுத்த சிறிய தொகைக்கு இத்தனை பெரிய சடங்கு செய்கிறார்களே என்று எண்ணி மனம் மகிழ்ந்தார்.

கோயில் நிர்வாக அதிகாரி வந்து என்னைப்பார்த்து "32 ரூபாய் கொடுத்தால் கருவூலத்திலிருந்து திருவாபரணங்கள் எல்லாவற்றையும் எடுத்து அம்பிகைக்குச் சாத்தி கற்கண்டு அன்னம் நிவேதனம் செய்து ஸ்ஹஸ்ரநாம அர்ச்சனை செய்வோம்" என்றார். உடனே நான் 35ரூபாவை எடுத்துக்கொடுத்தேன். கருவூலத்தில் இருந்து திருவாபரணங்களை எடுத்துக்கொண்டு வந்தார்கள. அவற்றுள் ஒரு பெரிய மரகதத்தை என் கையில் கொடுத்தார். அதன் விலை 8 லக்ஷம் என்றார்கள். அந்த மரகத அணிகலத்தின் பின்புறம் தங்கத் தகட்டில் நளச்சக்கரவர்த்தி என்று தேவநாகர லிபியில் எழுதியிருநதது. அதைக் கண்டு நான் அதிசயம் அடைந்தேன். நளச்சக்கரவர்த்தி அம்பிகைக்கு அதனைப பரிசாக அளித்தார் என அறிந்தேன். இப்பொழுது நளச்சக்கரவர்த்தி இல்லை. அவருடைய அணிகலன்கள். அரண்மனை முதலிய சின்னங்கள் யாதொன்றும் இல்லை. தேவிக்குத் தந்த திருவாபரணம் மட்டும் நிலைத்திருக்கின்றது. இதனால் அறம் செய்த பொருள் நிலைத்திருக்கும் என்பது தெளிவாகின்றது.

மூலஸ்தானத்தில் இருந்த வண்ணம் தவக்கோலத்தில் அம்பிகை அமர்ந்திருக்கின்றாள். தேவியின் இருமருங்கிலும் திருமகளும். திருமகளின் மருமகளாகிய கலைமகளும். வெண் சாமரம் வீசுகின்ற கோலத்துடன் நிற்கின்றார்கள். தேவியின் திரு முன் அழகிய சிவலிங்கம் இருக்கின்றது. வெளியேயிருந்து ஒரு கண்ணாடியைச் சூரியனுடைய வெயிலில்காட்டி அதன் ஒளியை லிங்கத்தின் மேல் படுமாறு செய்கிறார்கள். லிங்கத்தின் மேல் ஸ்வர்ணரேகை ஓடுவதைப் பார்த்தோம்.

மூகாம்பிகையைக் கண்குளிரக்கண்டு தரிசித்தோம்.

அங்கிருந்து தன்மஸ்தலம் போனோம். அது ஒரு பிரார்த்தனை ஸ்தலம். கோயிலில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது. கோயிலில் நிரம்ப வரவும் வருகின்றது. பெரிய நிர்வாகம் அங்கு சிவமூர்த்தியை வழிபாடு செய்தோம். அங்கிருந்து பல நதிகளை ஓடத்தில் கடந்து மேற்குக் கடற்கரையில் விளங்குகின்ற கோகர்ணத்தை அடைந்தோம்.

கோகர்ணம் பம்பாய் மாகாணத்தின் ஓரத்தில் இருக்கின்றது. மகா சிவராத்திரியன்று மகாபலேச்சுரக்கு நாங்களே அபிஷேக ஆராதனைகள் செய்தோம்.

### 1. மறக்க முடியாத சம்பவங்கள்

நான் ஒரு சமயம் உரையூரில் குடியிருந்தேன். தஞ்சையில் ராஜமாணிக்கம் செட்டியார் என்பவர் பலரிடம் வசூல் செய்து ஆண்டுக்கு ஒருமுறை ராமலிங்க சுவாமிகள் விழா செய்வார். அவர் என்னை விரிவுரைக்கு அழைத்திருந்தார். நான் கைம்மாறு கருதாமல் விரிவுரைக்குச் சென்றேன். தஞ்சையில் இருந்த என் நண்பர் குஞ்சிதபாதம் பிள்ளை ரயில் நிலையம் வந்து என்னை அவர் இல்லத்துக்கு அழைத்துச்சென்றார்.

அவருடைய வீட்டில் சிற்றுண்டி அளித்தார். பின்னர் விழாப் பந்தலுக்குச் சென்று வள்ளலாரைப் பற்றி விரிவுரை செய்தேன். தஞ்சையில் நல்ல ரசிகர்கள். விரிவுரை முடிந்த பின் குஞ்சிதபாதம் பிள்ளை வீட்டிற்குச் சென்றேன். என்னை விரிவுரைக்கு அழைத்த ராஜமாணிக்கம் செட்டியார் அங்கிருந்தே என்னை "போய் வாருங்கள்"என்று கூறி வழியனுப்பி விட்டார். ரயில் டிக்கட்டு வாங்கித் தருவார் என்று எதிர்பார்த்தேன். அந்தச் சிறிய பணியையும் அவர் செய்யவில்லை. குஞ்சிதபாதம் பிள்ளை வீட்டில் வர்க்கான்னங்கள் மிக்க சுவையோடு படைத்தார். என் கையில் ஒரே ஒரு ரூபாய் மட்டும் இருந்தது. அதனைக் குஞ்சிதபாதம் பிள்ளையினுடைய குழந்தையின் கையில் கொடுத்துவிட்டேன். ஒரு மாட்டு வண்டியை வைத்துக்கொண்டு ரயில் நிலையம் சென்றேன். ராஜமாணிக்கம் செட்டியார் ரயில் நிலையம் வருவார். டிக்கட்டு எடுத்துத் தருவார் என்று கருதினேன். அந்தப் புண்ணியவான் அங்கு வரவேயில்லை.

(தொடரும்)

# வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஐ.தே.கட்சியே பாடுபட்டது

## -காமினி லொக்குகே எம்.பி

நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அண்மைக்கால வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியே பெருமளவில் சேவை செய்துள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

1997ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு குடும்பத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையில் 1994ஆம் ஆண்டுக்குப் பின்னரேற்பட்ட மாற்றங்களை பெரும்பாலானவர்கள் மறந்துவிட்டதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட இக் காலப் பகுதியில் அதிகமானோருக்கு சைக்கிளிலிருந்து மோட்டார் சைக்கிளுக்கும் மோட்டார் சைக்கிளிலிருந்து ஏனைய வாகனங்களுக்கும் முன்னேறுவதற்கான ஒரு மாற்றம் ஏற்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள வாகனங்களின் எண்ணிக்கை இதற்கொரு சிறந்த உதாரணமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்துள்ளார். (ந-2)

# முல்லையில் மீனவர் நலன்கருதி தற்காலிக வெளிச்சவீடு அமைப்பு

(முல்லைத்தீவு)

மீனவர்களின் நன்மைகருதி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் கடற்கரையில் தற்காலிகமாக வெளிச்சவீடு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் எஸ்.மரியதாஸன் தெரிவித்துள்ளார்.

போரின் காரணமாக முல்லைத்தீவில் இருந்த வெளிச்ச வீடு அழிக்கப்பட்டிருந்தது. இதனால் கரை தெரியாது மீனவர்கள் திசைமாறிய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

சுனாமித் தாக்கத்தின் பின்னர் இந்த நிலை மேலும் அதிகரித்து கரை, திசை தெரியாது மீனவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனையடுத்து தற்காலிக ஏற்பாடாக வெளிச்சவீடு அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக சமாசத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-2)

# புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் கலையகங்கள் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

குரலின் மேஜர் திருமாறன், நாட்டுப் பற்றாளர் குலச்செல்வன் நினைவு ஒலிப்பதிவு கலையகங்க்ள் நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப் பட்டுள்ளன.

புலிகளின் குரலின் நடுவப் பணியகத்தில் அமையப்பெற்ற இக்கலையகங்களின் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணிக்கு புலிகளின் குரலின் துணைப்பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் நடைபெற்றது.

விழாச்சுடரினை தமிழீழ வானொலி இணைப்பாளர் திருமாறன், புலிகளின் குரலின் நிர்வாக இணைப்பாளர் இராஜேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மேஜர் திருமாறன் நினைவு கலையகத்தின் பெயர்ப் - பலகையினை மேஜர் திருமாறனின் சகோதரி றீனலோஜினியும் நாட்டுப்பற்றாளர் குலச்செல்வன் நினைவு கலையகத்தின் பெயர்ப்பலகையினை புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலனும் திரைநீக்கம் செய்துவைக்க கலையகங்களை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நாடாவை வெட்டிதிறந்து வைத்தார். (ந)

# சவுதியில் இலங்கையருக்கு மரணதண்டனை தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யத் தீர்மானம்

சவுதி அரேபியாவில் இலங்கையர்கள் 3பேருக்கு மரணதண்டனை விதிப்பதற்கு அளிக்கப் பட்ட தீர்ப்பை மீள்பரிசீலனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் மூன்று பேருக்கு மரணதண்டனையை விதிகக அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி மீள் பரிசீலனை செய்வதற்கு சவுதி அரேபியா தீர்மானித்துள்ளது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைக்கான தூதரகம் இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

மரணதண்டனையை நியமித்து வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றுவதற்கு கவனம் செலுத்துமாறு வேண்டி வெளிவிவகார அமைச்சினால் சமர்ப்பிக்கப் பட்ட மேன்முறையீட்டின் பிரதி பலனாக இந்த மீள்பரிசீலனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நடைபெறவுள்ள நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்துமாறு வெளிவிவகார அமைச்சர் சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தைக் கேட்டுள்ளது. (அ-2)

# ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த முற்போக்குச் சக்திகள் பாராட்டு

(கொழும்பு)

சகல இடதுசாரி மற்றும் முற்போக்குச் சக்திகளின் பொது ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை உரிய நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்தது பாராட்டுதற்குரியது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வலதுசாரிக்கட்சிகள் ஒன்றிணைந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இடதுசாரி மற்றும் முற்போக்குச் சக்திகள் ஒனறிணைவதும் அவசியமாகும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். தேசப்பற்றுள்ள சக்திகள் கருத்து வெளியிடுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளன.(து-2)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 24

பி. ஜே. ராஜய்யா

## பனிப்போர் யுத்தமானது!

“பக்கர் ராஜினாமா செய்யட்டும். சதாம் ஜனாதிபதி ஆகட்டும்”கைருல்லாவின் முடிவை அங்கிருந்தவர்கள் ஏகமனதாக ஆதரித்து ஆரவாரம் செய்தார்கள். பக்கர் எழுந்தார். சதாமிடம் வந்தார். அவரை கட்டியணைத்து வாழ்த்துக் கூறினார்.

உடல்நலம் சரியில்லாததால் ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வதாக நாட்டு மக்களுக்கு பக்கர் அறிவித்தார். புதிய ஜனாதிபதியாக சதாமின் பெயர் முன்மொழி யப்பட்டது.

1979ஜூலை 10ஆம் திகதி சதாம் ஜனாதிபதி ஆனார். கட்சிக்குள்ளும் வெளியிலும் களையெடுக்க வேண்டியவர்களின் பட்டியலை அன்றே தயாரித்து நடவடிக்கையில் இறங்கினார் சதாம். களையெடுக்கப்பட வேண்டியவர்களெல்லாம் களையெடுக்கப்பட்டார்கள்.



இவ்விதம் தன் அதிகாரத்தை வலுவாக நிலைநிறுத்திக் கொண்ட பிறகு வெளிநாட்டு எதிரி பக்கம் அவர் தன் கவனத்தைத் திருப்பி னார்.

“நேயர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு. ஜனாதிபதி சதாம் உசேன் இன்று டெலிவிஷனில் உரை நிகழ்த்துவார்”

ஈராக் வானொலியும் டெலிவிஷனும் 1983 செப்டம்பர் 8ஆம் திகதி தங்கள் வழக்கமான நிகழ்ச்சிகளை இடையிடையே நிறுத்தி இந்த அறிவிப்பைத் திரும்பத் திரும்ப அறிவித்துக் கொண்டிருந்தன.

ஈராக்கியர்கள் பரபரப்படைந்தார்கள். அவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சதாம் உசேன் என்ன சொல்லப் போகிறார் என்று அறிவித்துக் கொள்ள மிகவும் ஆர்வம் காட்டினார்கள். கடந்த சில நாட்களாகவே ஏதோ நடக்கப் போகிறது என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொமேனி ஈரானில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டு, ஈராக்கிலுள்ள ஷியா வகுப்பு முஸ்லிம்களை கலகம் செய்யுமாறு தூண்டிவிட்டதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பெரிய பள்ளம் விழுந்திருந்தது.

பாக்தாத்துக்கும் டெஹ்ரானுக்கும் இடையே கடும் யுத்தம் நடந்து கொண்டி ருந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆவேசமாகத் திட்டித் தீர்ப்பதும் குறை கூறுவதுமே செய்திகளாயின.

ஒரு நாட்டில் தனிநாடு கேட்டுப் போராடும் தீவிரவாதக் குழுவை அடுத்த நாடு தூண்டிவிட்டது. நிதி உதவியும், ஆயுத உதவியும் கொடுத்து கலவரத்தை வளர்த் தது.

இந்தப் ‘‘பனிப்போர்’’அடுத்த எந்தத் திசையில் திரும்பும் என்பதைத் தெரிந்து கொள்ளவே ஈராக்கியர்கள் சதாம் உசேனின் பேச்சைக் கேட்க ஆர்வமாக இருந் தார்கள்.

சதாம் டெலிவிஷனில் தோன்றினார். ஒரு காகிதக் கத்தையை கையில் எடுத்தார். “இது சேத்-அல்-அராப் நதி தொடர்பான ஈரான்-ஈராக் ஒப்பந்தம்”என்றார்.

யூப்ரடீஸ், டைக்ரீஸ் ஆறுகள் இரண்டும் ஈராக்கில் பஸ்ரா நகர் அருகே இணைந்து ஒரே நதியாகின்றன. இவ்விதம் இணைந்து அதற்கும் மேல் ஓடும் நதிக்கு ‘‘சேத் -அல்-அராப்’’(அரேபியர் நதி) என்று பெயர்.

இந்நதி ஈரானுக்கும், ஈராக்குக்கும் நடுவில் ஓடி, இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையாக அமைந்து வளைகுடாவில் கலக்கிறது. இந்த எல்லையோர ஆற்றுப்பகுதி யாருக்குச் சொந்தம் என்பதில் இரண்டு நாடுகளுக்குமிடையே பிரச்சினை இருந்து வந்தது.

1975இல் சதாம் இதற்கொரு முடிவு கட்டினார். “கிழக்குக் கரையும் ஆற்றில் பாதியும் ஈரானுக்குச் சொந்தம். மீதி ஆறும் மேற்குக் கரையும் ஈராக்குக்குச் சொந்தம்”என்று பேசி, சமரசம் செய்து உடன்பாடு கண்டார். இதுதான் சேத்-அல்-அராப் ஆறு தொடர்பான ஈரான்-ஈராக் ஒப்பந்தம்.

டெலிவிஷனில் தோன்றி அந்த ஒப்பந்தத்தை கையிலெடுத்த சதாம்-ஈராக்கியர் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க...அதை ஆவேசத்துடன் தாறுமாறாகக் கிழித்தெறிந்தார்.

“நன்றி கெட்ட ஈரானுக்கும் நம் எல்லையை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? இனி அந்த ஒப்பந்தம் செல்லாது. சேத்-அல்-அராப் முழு ஆறும் அதன் கிழக்குக் கரையும் நமக்கே சொந்தம். நம் உரிமையை நாம் நிலைநாட்டுவோம்”என்று முழங்கினார் சதாம்.

இந்த முழக்கம் கேட்டு ஈராக்கியர்கள் துள்ளிக் குதித்து ஆர்ப்பரித்தார்கள்.

ஆனால், ஈரான் அலறியது.

“கிழக்குக் கரை எங்களுக்குத் தான் சொந்தம். விட்டுக் கொடுக்க மாட்டோம்” என்றது அது. ஒப்பந்தத்தை கிழித்தெறிந்த ஏழாவது நாள், கிழக்குக் கரையை கைப்பற்ற இராணுவத்துக்கு சதாம் உத்தரவிட்டார். ஈராக் போர் விமானங்கள் ஈரானுக்குள் ஊடுருவிக் குண்டுமழை பொழிந்து யுத்தத்தைத் தொடங்கி வைத்தன.

சிறுவயதில் இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர, போதிய மார்க்குகள் இல்லை யென்று கூறி இடம் மறுக்கப்பட்ட சதாம், தானே முன்னின்று இந்த யுத்தத்தை நடத்தி னார். அவரது இராணுவ நடவடிக்கைகளும் இராணுவத்தினரை அவர் களத்தில் துணிச்சலுடன் சந்தித்து உற்சாகப்படுத்தும் காட்சிகளும் ஈராக் டெலிவிஷனில் காட்டப்பட்டன.

ஈரான்-ஈராக் யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. அப்போது இன்னொரு நாடு திடீரென தன்னை வம்புக்கு இழுக்கும் என்று சதாம் எதிர்பார்க்கவில்லை.

1981ஜூன் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அந்திப் பொழுது பாக்தாத் நகர மேற்கு வானத்தில் செந்நிறம் படர்ந்திருந்தது. வெம்மை தணிந்த கதிர்களுடன் சூரியன் மெல்ல மெல்ல விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

இத்தனை ரம்மியமான சூழ்நிலையைச் சிதைக்கிற மாதிரி வானத்தில் திடீரென இடி முழக்க ஓசை...

இஸ்ரேலின் நவீன போர் விமானங்கள் கூட்டமாய் பாக்தாத் நோக்கி மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்தன. ஏனிவை?, இப்படி? என்று நிதானிப்பதற்குள் அவை பாக்தாத் புறநகரிலிருந்த “ஓசிராக்”அணு உலையை சரமாரியாகக் குண்டு வீசித் தாக்கி, தவிடு பொடியாக்கி அழித்துவிட்டு நிமிடத்தில் மாயமாய் மறைந்துவிட்டன.

ஈரானுக்கெதிரான போரில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சதாம் இதையறிந்து அதிர்ச்சியடைந்தார். இஸ்ரேல் விமானங்கள் தாக்கி அழித்தவை அணு உலையை அல்ல... சதாமின் நெடுநாள் கனவை!

(தொடரும்)

## சுனாமி நிவாரண மருந்துப்பொருட்கள் சகல பிரதேசங்களுக்கும் வழங்கப்படும்

(கொழும்பு)

சுனாமி நிவாரணமாகக் கிடைத்த மருந்துப்பொருட்களை நாட்டின் சகல மாவட்டங்களிலும் உள்ள மருந்தகங்களுக்கு விநியோகிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமி நிவாரணமாக 200 கொல்கலன் மருந்துப்பொருட்கள் இலங்கைக்குக் கிடைத்ததாக சுகாதார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் அஜித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று மேலும் பல நடுகளிலிருந்தும் சுனாமி நிவாரணமாக மருந்துப்பொருட்கள் கிடைத்தவண்ணம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு கிடைக்கும் மருந்துப்பொருட்கள் கூடுதலாக உள்ளதால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் போன்று ஏனைய பிரதேசங்களுக்கும் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துப்பொருட்களில் அநேகமானவை ஐரோப்பிய நாடுகளில் இருந்து கிடைத்துள்ளது. இந்த மருந்துப்பொருட்களின் முறைமை, அவற்றைப் பயன்படுத்தும் விதம் குறித்து புரியாத மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அந்த மருந்துப்பொருட்களை உடனடியாகப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

## உள்ளூராட்சி விழாவுக்கு ஏற்பாடு

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள நகரசபைகள் மற்றும் பிரதேசசபைகள் இவ்வருட உள்ளூராட்சி வார விழாக்களைக் கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றன.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சம்பந்தப்பட்ட சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் சனசமூக நிலையங்கள், சிறுவர் பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகிய மட்டங்களில் பல்வேறு போட்டிகளை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு நூல் வெளியீடுகளையும் மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இவை தவிர சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பிரசாரப் பணிகள், சிரமதானப் பணிகள், கலை நிகழ்வுகள் போன்றவற்றையும் உள்ளூராட்சி வாரத்தில் நடாத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-49)

## நிக்கொட் நிறுவனம் நிதி உதவி

(பொன்னாலை)

வலி-தென்மேற்குப் பிரதேசசபை தனது மாதகல் கிழக்கு உப- அலுவலகத்துக்குப் புதிய கட்டடம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இக்கட்டடத்தை அமைப்பதற்கென வடக்கு-கிழக்கு சமுதாய மீள மைப்பு (நிக்கொட்) திட்டம் சுமார் ஒரு கோடியே 16 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியிருக்கின்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு வலி-தென் மேற்குப் பிரதேச சபையினர் விடுத்த கோரிக்கையை அடுத்தே இக்கட்டடத்தை நிக்கொட் திட்ட நிதியுதவியுடன் அமைத்துக்கொடுப்பதற்கு அரச அதிபர் அனுமதியை வழங்கியிருக்கின்றார்.


கடந்த 1992ஆம் ஆண்டு மாதகல் பகுதிகளில், இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் மேற்படி உப அலுவலகக் கட்டடம் நிர்மூலமாக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-49)

## மகிமை விழா

(புங்குடுதீவு)

பரமபிதா அருள் கொடையால் அற்புதங்கள் புரியும் அருள்மிகு அந்தோனி முனீந்திரருக்கு புனித யாத்திரைத் தலமான புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தில் மகிமை விழா எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. சுவாமி அ.இம்மானு வேல் அ.ம.தி.விழாவை நெறியாளுகை செய்வார். (அ-2)






வில்லூன்றித் தீர்த்தக்கேணியில் ஆடி அமாவாசை நிகழ்வில் மக்கள் தீர்த்தக்கரையில் நீராடுவதையும் பிதிர்கடன்கள் நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம்.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல் - குறள்

**வலம்புரி**

## யாழ். குடாநாட்டில் வீழ்ச்சியடையும் வாசிப்புப் பழக்கம்

வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமாக மாணவர்கள் உயர்ந்த பெறு பேற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு சிறிலங்கா ரெலிக்கொம் மின் வடமாகாணத் தலைவர் எந்தரி வி. யோகேந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், வாசிப்ப தன் மூலமே மாணவர்கள் இயல்பான அறிவைப்பெறமுடியும் எனக் கூறியிருந் தார்.

அதேநேரம் வாசிப்புடன் இணையத் தளத்தின் ஊடாக தகவல்களைப் பெற் றுக்கொள்வதும், நவீன தகவல் தொழில் நுட்ப உலகின் பாதையில் பயணத்தை மேற்கொள்வதற்கு அவசியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்திரி யோகேந்திரன் கருத்தில் இருக் கக்கூடிய உண்மைத் தன்மை ஏற்கனவே பலராலும் கூறப்பட்டபோதிலும், யாழ். குடாநாட்டு மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் மிகமோசமாக இருக்கின்றமை வேதனைக்குரியதாகும்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண மக்களின் வாசிப்புப் பழக்கம் உச்சம் பெற்றிருந்த தென்பதற்கான சான்றாகவே யாழ்ப்பா ணப் பொது நூலகம் விளங்குகின்றது.

யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை எரி யூட்டுவதன் மூலம் தமிழ்மக்களின் அறி வியலை நாசம் செய்துவிடமுடியும் என்ற எண்ணப்பாட்டிலேயே அன்றைய ஆட்சி யாளர்கள் யாழ். பொது நூலகத்திற்குத் தீயிட்டனர்.

எந்த நோக்கத்திற்காக சிங்கள ஆட் சியாளர்கள் பொது நூலகத்தை தீயிட்டு எரித்தார்களோ! அந்த நோக்கம் நிறை வேறுவதற்கு யாழ்ப்பாண மாணவர்கள் இடம்கொடுத்துவிட்டார்கள் என்றே கூற வேண்டும்.

யாழ். பொது நூலகம் மீளமைக்கப் பட்டபோதிலும், அங்கு செல்லும் மாண வர்களின் எண்ணிக்கை மிகக் குறை வாகவே இருக்கின்றது. இதைவிட யாழ்ப் பாணத்திலுள்ள பாடசாலைகளில் இருக் கின்ற நூலகங்களைப் பயன்படுத்தும் மாணவர்கள் ஒருசிலரே என்று கூறுமள விற்கு மாணவர்களின் வாசிப்புப் பழக் கம் மிகமோசமாகியுள்ளது.

மாணவர்களிடையே வாசிப்புப் பழக் கத்தை ஏற்படுத்துவதில் குடும்பசூழல் பெரும் பங்காற்றுகின்றதென்பது அறி ஞர்களின் கருத்து.

மாணவர்களின் சிறுபராயத்தில் அவர் களின் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்து வதில் பெற்றோர் கவனம் செலுத்துவார் களாயின் அவர்களின் வாசிப்புப் பழக் கம் அதிகரிக்கும்.

எனினும் இந்த நிலைமை யாழ்ப்பாண வீட்டுச் சூழலில் இன்று அருகிவிட்டது. எதற்கெடுத்தாலும் தொலைக்காட்சி என்ற நிலை ஏற்பட்டுவிட்டதால் மாணவர்கள் தாமாக தேடலில் ஈடுபடும் பழக்கம் இல் லாதுபோய்விட்டது.

இதற்கு மேலாக எந்த மாணவன் பத் திரிகை வாசிப்பை தனது அத்தியாவசிய மான பழக்கமாகக் கொள்கின்றானோ அவனே வாசிப்புப் பழக்கத்தை தொடர் கின்றான். அவனாலேயே சாதனை படைக்க முடிகின்றது. இதுவே நிஜம்.

## ஊடகவியலாளருக்கு தனது செய்தியை பிரசுரிக்க அங்கீகாரம் உள்ளது

(கொழும்பு)

ஊடகவியலாளர் இப்தால் அத்தாஸ் எழுதிய பாது காப்பு செய்தி ஒன்றின் தொடர்பில் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபரிடம் ஆலோசனை மேற்கொண்டதாக வெளி யான செய்தியையிட்டு சுதந்திர ஊடக அமைப்பு கண் டித்துள்ளது. இப்தால் அத்தாஸ் ஆயுதங்கள் தொடர் பில் எழுதிய கட்டுரைக்காக அரச ரகசியங்களை பாது காக்கும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியுமா என பொலிஸ்மா அதிபரிடம் ஜனாதிபதி கேட்டிருப்ப தாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட் டாளர் சுனந்த தேசப் பிரிய ஊடகவியலாளர் ஒருவருக்கு தமது செய்திகளை பிரசுரிப்பதற்கு அங்கீகாரம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த செய்தித் தொடர்பில் சாதா ரண முறையில் ஆராயமுடியும்.அதனை விடுத்து ஊடகவி யலாளரைத தண்டிக்கும் வகையில் நடந்துகொள்ளப் படும் நடவடிக்கைகளை தமது அமைப்பு கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## நிக்கொட் நிதியுதவியுடன் விவசாயப் பயிற்சி நிலையம்

**ஒரு கோடி ரூபா செலவில் நிறுவ நடவடிக்கை**

(பருத்தித்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் விவ சாயிகளுக்கான நவீனவசதிகள் கொண்ட "விவசாயப் பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற் கான நிதி நிக்கொட் நிறுவனத்தினால் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இவ் விவசாயப பயிற்சி நிலையத்திற்கான நிர்மாண நடவடிக்கைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையம் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாகும். இப்பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய பல்வேறு வகையான பயிற் சிகள் வழங்கப்படவுள்ளன. (து-52)

## சட்டப்படி வேலைசெய்யும் நடவடிக்கை கைவிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை சுங்க அதிகாரிகள் சங்கம் ஆரம்பித் திருந்த சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நட வடிக்கையை கைவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக நீதி யமைச்சு சாதகமான பதிலை வழங்கியதையடுத்தே இந் தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வழமையான முறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும வகையில் புதிய சுங்க அதிகாரிகளை சேர்த்துக் கொள்வ தற்கு எதிர்ப்புத் தெரிவித்தே சுங்க அதிகாரிகள் சங்கம் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையை முன்னெடுத் தது.

இதன் கீழ் இருபது வரி அதிகாரிகளை உதவி சுங்க அத்தியட்சகர்களாக இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள் ளதாக சுங்க அதிகாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள் ளாா.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தை வாபஸ் பெறுவ தற்கு திறைசேரியின் பிரதிச் செயலாளர் வாக்குறுதி யளித்ததால் தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடு வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (து-9)

## கொழும்பு நகருக்குள் கொள்கலன் வாகனங்கள்

(கொழும்பு)

கொள்கலன்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை கொழும்பு நகருக்குள் வருவதை தவிர்க்குமாறு பொலிஸ போக்குவரத்துப் பிரிவினர் சாரதிகளுக்குத் தெரிவித் துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் இடம்பெறும் வேலை பகிஷ கரிப்பு காரணமாக துறைமுகத்திற்கு கொள்கலன் வாக னங்கள செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்புப் போக் குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதனால் கொழும்பு நகருக்குள் கொள்கலன் வாக னங்கள் செல்லுமாயின் அதிக அளவில் வாகன நெரி சல் ஏற்படக்கூடும் எனத்தெரிவித்துள்ளார். (து-9)

## வடமராட்சி வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள்

(மருதங்கேணி)

வமராட்சி வலய மட்ட ஆங்கில தின போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதலில் மருதங்கேணி,கரவெட்டி பருத்தித்துறை ஆகியவற்றுக்கிடையில் கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் தனித்தனியே நடைபெற்று அதன் பின்னர் வலய மட்ட போட்டிகள் இடம்பெறும்

மருதங்கேணி கோட்ட மட்டப்போட்டி ,6,10 திகதி களில் மருதஙகேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை யிலும் பருத்தித்துறை கோட்ட மட்டப்போட்டிகள் 6,9ஆம் திகதி களில் வட இந்துமகளிர் கல்லூரியிலும் கரவெட்டி கோட்ட மட்டப்போட்டிகள் 6,8ஆம் திகதிகளில் நெல்லியடி மத் திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக ஆங் கில பாட உதவிப்பணிப்பாளர் தெரிவித்துளளார். (ற-35)

## பணிப்பெண்களுக்கு மாதாந்த சம்பளம் 15 ஆயிரமாக இருக்க வேண்டும்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக வெளிநாடுகளுக்கு தொழில் பெற்றுச்சென்றுள்ள பணிப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சி போதுமான தாக இல்லை என்றும் அதனால் இந்த நடைமுறை யில் மாற்றங்களைக் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள் ளதாகவும் தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு அதாவுட செனவிரத்ன தெரிவித் துள்ளார்.

அனுமதி பெற்ற வெளிநாட்டு தொழில் முகவர்களின் வேலைத்திட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதி காரிகளுக்கோ தரகர்களுக்கோ இலஞ்சம் வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு வெளிநாடுகளுக்கு பணிப் பெணகளாகச் செல்வோருக்கு அறிவுரை கூறிய அமைச் சா, வேலைக்குச் செல்லும் பணிப்பெண்களது சம்பளம் 15 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றும அதற்குக் குறைவாக எந்தவொரு முகவர் நிலை யமும வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்ப அனு மதிக்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (து-9)

## பாடசாலை மாணவி வாகன விபத்தில் பலி

(கொழும்பு)

கொலனாவ கொக்கடுவப் பகுதியில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு இச் சம் பவம் இடம்பெற்றுள்ளது.

இசசம்பவத்தின் பின்னர் அங்கு கூடிய மக்கள் மிகவும் பதற்றமான முறையில் நடந்துகொள்ள முயன்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கள் மாணவி மீது மோதிய பஸ் வண்டியைத் தாக்கியுள்ளதோடு பஸ் சாரதியையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.எனினும் பொலிஸாரின் தலையீட்டையடுத்து நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (அ-9)

## சபாநாயகம் காலமானார்

(கொழும்பு)

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியாகத் திகழ்ந்த வெற்றிவேல் சபாநாய கம் கொழும்பில் நேற்று முன்தினம் காலை காலமானார்.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் ஆசிரியராகத் தமது தொழிலை ஆரம்பித்து கல்விததுறை யில் பல பதவிகளை வகித்தார்.

கல்வி அதிகாரியாகவும் பிரதம கல்வி அதிகாரியா கவும் கல்விப் பணிப்பாளராகவும் கண்டி, வவுனியா, திரு கோணமலை,யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கட மையாற்றினார்.

இறுதியில் கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப பாளர் நாயகமாக பணியாற்றி ஓய்வுபெற்றார்.

வெற்றிவேல் சபாநாயகம் பல்வேறு சமய, சமூக நிறுவனங்களில் சேவையாற்றியுள்ளார்.

இவர் கொழும்பு தொழிற்சங்கத்தின வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டவர். இறக்கும் போது இவருக்கு வயது 70. (அ-2)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்




**இந்தப் பிரபஞ்சம் நாம் அனுபவிப்பதற் காகவே உள்ளது. ஆயினும் ஒன்றையும் வேண்டாதே. ஆசைப்படுவது நம்மைப் பிச்சைக்காரன் ஆக்குகிறது. நாம் அரசிளங் குமாரர்கள் . பிச்சைக்காரர்கள் அல்ல. மனதில் ஆசை குறையக் குறைய நாம் மிகவும் நன்றாக செயல் புரிகிறோம்.**


சுவாமி விவேகானந்தர்











நேற்று இணுவில் பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தை அடுத்து பொதுமக்கள் வீதித்தடை ஏற்படுத்துவதையும் அவர்களைப் பொலிஸார் விரட்டுவதையும் படங்களில் காணலாம்.

## கனடாவாழ் புங்குடுதீவு மக்களால்
# திலீபன் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கனடாவாழ் மக்கள் ஒன்றியத்தினால் புங்குடுதீவு தியாக தீபம் திலீபன் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.

30 இலட்சம் ரூபா பெறுமதியான இவ்வண்டி கையளிப்பு நிகழ்வு இன்று காலை 11.30மணிக்கு அபிவிருத்திக் குழுத்தலைவர் கா.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் எஸ்.கண்ணன், தீவகக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வி.இசைச் செல்வன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர். (ச-126)

# ஹெல்கீசன் இலங்கை வருகை இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கீன் நேற்றுபிற்பகல் 1.45 மணியளவில் இலங்கை வந்தார்.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த அவர் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேசவுள்ளார்.

இதேவேளை நேற்று அரச பிரதிநிதிகளை சந்தித்த விடார்ஹெல்கீசன் அச்சந்திப்புக்கள் குறித்து இன்றைய சந்திப்பில் விளக்கவுள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான சந்திப்பினை அடுத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ,அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால ஆகியோர் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அதன் பின்னர் அவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட காலிப்பிரதேசத்தையும் சென்று பார்வையிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## தேசிய துணைப்படை வீரர்கள் இருவர் வீரச்சாவு

10.07.05 அன்று திருகோணமலையில் உள்ள அன்புவெளி என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாதவர்கள் தாக்கியதில் தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை விஜேந்திரராசா (துங்கராசா விஜேந்தரராசா இளங்கத்தை சம்பூர் திருகோணமலை);

14.07.2005 அன்று வில்கந்த என்னும் இடத்தில் இராணுவத்தினரின் பதுங்கித் தாக்குதலில் தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை உதயகுமார் (தம்பிராசா உதயகுமார் வெருகல் முகத்துவாரம் மாவடிச்சேனை திருகோணமலை) (ச)

## யாழ்ப்பாணப்...

இவ் ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணம்,சுன்னாகம், தெல்லிப்பழை, மானிப்பாய்,கோப்பாய்,வட்டுக்கோட்டை, அச்சுவேலி,இளவாலை பொலிஸ் பிரிவுகளில் ஆமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் நோக்கில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ் ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முஸ்லிம்களின் அபிலாசைகளை ஏற்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு
## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனும் எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னரே எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பதென்றமுடிவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கும் என அக்கட்சி அறிவித்துள்ளது.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் தாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவர்கள் முன்வைக்கும் உறுதிமொழிகளை எழுத்து மூலம் பெற்றுக்கொள்வதாகவும் சிறில்ங்கா முஸ்லிம்காங்கிரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச)

# மேர்வின் சில்வாவுக்கு பிடிவிறாந்து

(கொழும்பு)

தொழில் துறை பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை உடனடியாக கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு கொழும்பு பிரதம நீதிமன்றம் நேற்று பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

இவ்வுத்தரவை கொழும்பு பிரதம நீதிமன்ற மேலதிக நீதிபதி ஹிகான் பலப்பிட்டிய பிறப்பித்துள்ளார்.

ரூபா 10 இலட்சத்தை நபர் ஒருவருக்கு வழங்கி அப்பணத்தை மீளச் செலுத்தாமல் மோசடி செய்துள்ளார் எனத்தெரிவித்து மேர்வின் சில்வா ஊழல் மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

அவ்வழக்கை விசாரணைக்கு எடுத்தபோது அவர் நீதிமன்றத்திற்கு செல்லாததை அடுத்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## யாழ்.பொலிஸ்...

திருமதி சரோஜினி இளங்கோவன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை கொழும்புக்கு அனுப்புமாறும் பரிசோதனைமுடிந்தவுடன் அவரது சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அவரது சடலம் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றிரவு கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொலிஸாரை சூழ்ந்து கொண்ட போதே அவர் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொல்லப்பட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு பாதுகாப்பிற்கு சென்ற இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தொடர்பாக தகவகள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது. (ச)

# இராணுவச்சிப்பாய் சுட்டதில்...

இதனையடுத்து சம்பவம் நடந்த இடத்தில் கூடிய பொதுமக்கள் இராணுவத்தினரை மடக்கிப்பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அதன்போது இராணு அதிகாரியும்,சிப்பாய்களும் தாம் வந்த துவிச்சக்கரவண்டியொன்றை கைவிட்டு விட்டு தப்பிச்சென்றனர்.

இதனையடுத்து கொதிப்படைந்த மக்கள் ஒன்று திரண்டு வீதிகளில் தடைகளை ஏற்படுத்தினர்.

இச்சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது. பெருமளவான இராணுத்தினரும் ,பொலிஸாரும் அப்பகுதியில் குவிக்கப்ட்டனர்.

பொலிஸார் மக்கள் மீது சரமாரியாக கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் மக்கள் சிதறி அடித்தவாறு ஓடினர். இதன் போது சிலர்படுகாயமடைந்தனர். இராணுவ வாகனங்களும் மக்களால் சேதப்படுத்தப்பட்டது

இச் சம்பவங்களை அடுத்து அங்கு விரைந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுடன் கலந்துரையாடி பதற்றத்தை தணிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அவர்களின் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுக்களைமேற்கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டது.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நிலைமை கட்டு மீறிச் சென்றதை அடுத்து அவ்விடத்தை விட்டு திரும்பிச்சென்றனர்.

### இராணுவம் மறுப்பு

இராணுவவீரர்ஒருவரின்துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாலேயே சிகையலங்கரிப்பாளர் மரணமானதாக பலாலி பாதுகாப்புப் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று இராணுவ வீரர்கள் 5 பேர் மதிய உணவு எடுத்துச் செல்லும் வேளை தமது சொந்த வேலைக்காக இணுவிலில் உள்ள சிகையலங்கார நிலையகத்திற்குச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் தனது முடியை வெட்டிக்கொண்டிருந்த சமயம் ஏனையவர்கள் வெளியே நின்றிருந்தனர். அவ்வேளை வெளியில் நின்ற ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் குறிப்பிட்ட சலூனில் பணியிலிருந்தவர் மரணமானார் என்றும் இதனையடுத்து அப்பிரதேச மக்கள் குழப்பமடைந்து கலவர நிலை ஏற்பட்டது என்றும் பலாலி படைத்தலைமையகம் தெரிவித்தது. (ச)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
மக்கள்திலகம் எம்.ஜீ.ஆர், லதா,நாகேஷ்
நடித்த
உரிமைக்குரல்
கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.